கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை

17-2-1974

40 காசு




சரியான வேளையில் சரியான வேலை...
அப்பா! இன்னிக்கி எங்க ஸ்கூல்லே கிரிக்கெட் மாட்ச் நடந்தது. என்னெ சீக்கிரம் 'அவுட்' ஆக்கிட்டாங்க!
அதெப்படி ராமு?... என்னாச்சு?...
மணி வீசிய 'ஷார்ட் பாலே' நான் 'தட்' செய்யும் போனேன். ஆனா பந்து 'பாட்'டின் விளிம்பிலே பட்டு எழும்பி, நேரே விக்கெட் கீப்பரின் கையிலே சிக்கிச்சு.
அப்படியா? ஆனால், 'ஷார்ட் பாலே' அடிக்க பலவித 'ஸ்ட்ரோக்'குகள் இருக்கே! உதாரணமாக, 'ஹூக்' அடிக்கலாம். நீ சிறிது வலது பக்கம் நகர்ந்து, பந்து உன்னுடைய இடது பக்கம் உயரே வரும்படி நின்றுகொள். பந்து வந்ததும் 'பாட்'டை மேற்புறம் சுழற்றி அடி...
முழு பலத்துடன் அடித்தால், நீ முழுவதும் திரும்பி, விக்கெட்கீப்பருக்கு நேரிலே வந்துவிடுவாய்!
சரி, மணி எட்டரை ஆகிவிட்டது. போய் படுத்துக்கொள்... பல் துலக்கிவிட்டாயல்லவா?
ஓ! சாப்பிட்டவுடனே வாயைக் கொப்பளித்து விட்டேன், அப்பா!
அது போதாது ராமு. பற்களைச் சிதைக்கும் உணவுத் துகள்களை நீக்கும் பொருட்டு, இரவும் பகலும் பற்களைத் துலக்க வேண்டும். பிறகு, கொஞ்சம் அதோடு ஈறுகளையும் தேய்த்துக் கொடுக்க வேண்டும் — அவற்றை ஆரோக்கியமாகவும் உறுதியாகவும் வைத்திருக்க இதுவே வழி.
சரி, அப்பா.
வா, நாமிருவரும் போர்ஹேன்ஸ் பற்பசையால் பல் துலக்குவோம்.
FOR THE GUMS
போர்ஹேன்ஸ்
பல் வைத்தியர் ஒருவரால் உருவாக்கப் பட்ட பற்பசை.

49F-203R-TAM




உயிர்களிடத்து அன்பு வேண்டும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேண்டும்
— பாரதியார்



கோகுலம்

மலர் 2 : இதழ் 23
பிப்ரவரி 17, 1974
பிரமாதீச, மாசி 5

அட்டையிலுள்ள ஒட்டகங்கள்:
காதோடு நெருங்குகின்ற அவசியம்
கட்டாயம் இருக்குதொரு ரகசியம்!
வண்ணப்படம் : எஸ். அஸத்



சந்தா விவரம்:

உள் நாடு:
ஒரு வருடம் ... ரூ. 10–00
ஆறு மாதம் ... ரூ. 5–00

இலங்கை:
ஆண்டுச் சந்தா: ரூ. 15–00
(இலங்கை நாணயப்படி)

இதர நாடுகள்:
ஆண்டுச் சந்தா ரூ. 25–00

★

மானேஜர், கோகுலம்
கல்கிப் பூங்கா, சென்னை - 600031



பிள்ளையார் பெருமை

திருமுருக கிருபானந்தவாரியார்

அறுகின் பெருமை

வளமை மிகுந்த விதேக நாட்டின் தலைநகராகிய மிதிலாபுரியை ஜனக மன்னர் மாட்சியுடன் ஆட்சி புரிந்து வந்தார். அன்பு, கலைஞானம், ஈகை, ஆண்மை, ஒழுக்கம் முதலிய எல்லா நற்குணங்களும் அவருக்கு அணிகலங்களாக விளங்கின.

ஒருநாள் தேவரிஷியான நாரத முனிவர் அவரிடம் சென்று, ''ஜனக வேந்தே! இறைவனுடைய திருவருளால் உனக்கு மேன்மேலும் எல்லா நலன்களும் விளைவதாக!'' என்று கூறி வாழ்த்தினார்.

ஜனகர் நாரதரைப் பார்த்துச் சிரித்தார். ''நாரதரே! அஹம் பிரம்மம். பிரம்மம் என்ற பொருள் வேறா? உமக்கு இந்த ஞானம் இல்லையே? ஆன்மாவே பிரம்மம். கொடுப்பது யார்? பெறுவது யார்? என்னைப் பிரம்மம் என்று நீர் உணர்ந்தீரில்லை'' என்று கூறினார். நாரதர், ''ஜனகரே! கடவுளின் தன்மையை நீர் உணருமாறு செய்வேன்'' என்று கூறிச் சென்றார்.

நாரதர் விநாயகப் பெருமானைத் தொழுது, ''கருணையங்கடலே! ஜனக மன்னன் ஆன்றோர்களைக் கண்டு வணங்குகின்றானில்லை. நானே பிரம்மம் என்று மயங்கி யிருக்கின்றான். அவனைத் திருத்தி நல்லுணர்வு நல்க வேண்டும்'' என்று விண்ணப்பம் செய்தார்.

விநாயகப் பெருமான் தொழு நோயுடன் மெலிந்த ஓர் அந்தணரைப் போல் ஜனகரிடம் போனார். எல்லோரும் வெறுக்கும் வடிவுடன் சென்ற வேதியரை ஜனகர் பார்த்து, ''உமக்கு என்ன வேண்டும்?'' என்று வினவினார். வேதியர், ''பசி நோயால் பரிதவிக்கின்றேன். உணவு வேண்டும்'' என்றார்.

அரசர் அவருக்கு இலையில் அன்னம் இடுமாறு செய்தார். வேதியராக வந்த விநாயகர் இலையில் கை வைத்தவுடன் உணவுகள் மறைந்து விட்டன. ஏவலர்கள் வியப்புற்றுச் சமைத்த அன்னங்கள் அத்தனையும் படைக்கலானார்கள். விநாயகர் சமைத்த அத்தனையையும் உண்டார். சமைக்காத அரிசி, பருப்பு, புளி, காய்கறிகள், நெய், வெண்ணெய், மிளகு, உப்பு முதலிய அனைத்தையும் மூட்டை மூட்டையாகவும் உண்டார். ஏவலர்களும் ஜனகரும் அதிசயம் அடைந்து, அந்த ஊரில் உள்ள கடைகளிலுள்ள அவ்வளவையும் கொணர்ந்தார்கள். அத்தனையையும் எடுத்து விழுங்கி விட்டார். அண்டா, குண்டா, கொத்துச் சட்டி, வாளி, அரிவாள்மணைகள் என்ற பாத்திரம் பண்டங்கள் எல்லாவற்றையும்கூட எடுத்து விழுங்கி விட்டார். ஜனகர் அஞ்சினார். வீடும் நகரும் யானையுண்ட விளாங்கனி போல் ஒன்றுமின்றிக் காலியாகி விட்டன. 'இவரை எப்படி அகற்றுவது' என்று எண்ணினார். ''அந்தணரே! இங்கு வெந்ததும் வேகாததும் ஆகிய அனைத்தையும் விழுங்கிவிட்டீர். இனி இங்கு ஒன்றுமில்லை. நீர் வேறிடம் போய்ப் பசியாறும்'' என்றார்.

வேதியர் சிரித்தார். ''ஜனகரே! நீரே பிரம்மம். கொடுப்பதும் பெறுவதும் வேறு இல்லை என்கின்ற நீர் ஓர் ஏழைக்குப் போதுமான அன்னம் தர முடியவில்லையா? நீர்தான் பிரம்மமோ? பிரம்மம் ஆனால் நீர் பல பண்டங்களைப் படைத்துத் தரலாந்தானே? பிரம்மமாகிய நீர் இல்லை என்று பல்லைக் காட்டலாமோ? நாமே பிரம்மம் என்ற உமது கொள்கையை நெருப்பில் இட்டு எரித்து விடும்'' என்று சீற்றத்துடன் கூறி ஏளனம் செய்தார்.

ஜனகர் நாணமுற்றார். ''இவருடைய மொழிகள் சிறந்து விளங்குகின்றன. இவர் யாரோ? அதையறியவும் முடியாது மயங்கும் நான் பிரம்மமா?'' என்று எண்ணி வருந்தினார்.

மிதிலாபுரியில் திரிசிரன் என்ற ஓர் அந்தணர் வேத நெறி நின்று தம் மனைவியாகிய விரோசனை என்ற உத்தமியுடன் விநாயகரை மனமொழி மெய்களால் வழிபட்டுக் கொண்டிருந்தார். விநாயகராகிய வேதியர் திரிசிரனுடைய இல்லத்துக்கு எழுந்தருளினார். திரிசிரனும் விரோசனையும் அன்புடன் அவரை அஞ்சலி செய்தார்கள்.


''அன்பனே! நமக்கு அதிக பசி. ஜனகரிடம் சென்றோம். அன்னம் அளித்தார். பசி அடங்கவில்லை. உன்னிடம் வந்தோம்'' என்றார்.

திரிசிரன், ''அடிகளே! கடல் நீரைப் பருகி விடாய் தணியாத ஒருவனுக்குக் குடம் நீரால் விடாய் தணியுமோ? ஜனகரால் பசி தணியாத உமக்கு ஏழையால் என்ன செய்ய முடியும்? இன்று எங்களுக்கே உணவில்லை. விநாயகரை வழிபட்டு மிஞ்சியிருக்கின்ற ஓர் அறுகு தான் உளது'' என்றார்.

வேதியர், ''அம்மா! உள்ளன்பில்லாதவர் தருகின்ற கோடிப் பொன்னைக் காட்டிலும் அன்புள்ளவர்கள் தரும் கடுகு உயர்ந்தது. அந்த அறுகைக் கொண்டு வந்து கொடு!'' என்றார் விரோசனையைப் பார்த்து. விரோசனை அன்புடன் ஓர் அறுகை இட்டாள். வேதியர் உண்டு ஏப்பம் விட்டார். உடனே அவர்களுடைய கூரை வீடு ஏழடுக்கு மாட மாளிகையாயிற்று. அவர்கள் வீட்டில் நவநிதியங்களும் தோன்றின.

விநாயகர், அவர்களுக்குத் தமது காட்சியைத் தந்தார். இதனை அறிந்த ஜனகர் விரைந்து விநாயகரைப் பணிந்து அன்பு செய்தார்.

விநாயகர், ''வேந்தனே! நானே பிரம்மம் என்ற ஞானம் சிறந்ததன்று. அது நீயானாய் என்ற 'தத்துவமசி' என்ற வாக்கியத்தால் அது — பிரம்மம், நீ — ஆன்மா என்பது விளங்குகின்றதல்லவா? ஆதலால் ஆன்மா பரம்பொருளை அடைய வேண்டும்'' என்று உபதேசித்து மறைந்தருளினார்.







வழுக்கைத் தலையனுக்கு

முன்னொரு காலத்தில் ஒரு பெண் இருந்தாள். அவளுக்கு ஒரே ஒரு பிள்ளை இருந்தான். அவன் படிக்கவில்லை, வேலை செய்யவில்லை. பொழுதெல்லாம் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து கொண்டு போவோர் வருவோரை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பான். . இப்படிச் சோம்பேறியாக வளர்ந்த அவனுக்கு இருபது வயதாகியது. தாயார் உழைத்துச் சம்பாதித்து இந்த அழகான பிள்ளையை வளர்த்து வந்தாள். சோம்பேறியும் முட்டாளுமான அவன் தலையில் ஒரு மயிர் கூட முளைக்கவில்லை. பளபளவென்று வழுக்கை.

இப்படிப்பட்ட ஒரு பிள்ளையைக் கண்டால் தாயாருக்கு எப்படி இருக்கும்? ''இந்த உலகம் உன்னை எப்படி மதிக்கும்? ஒரு வேலையும் செய்யத் தெரியாத நீ எப்படிப் பிழைக்கப் போகிறாய்? வழுக்கைத் தலையனான உன்னை எந்தப் பெண் கல்யாணம் செய்து கொள்ளுவாள் ?'' என்றாள்.


வழுக்கைத் தலையனுக்கு அம்மாவின் புலம்பலில் ஒன்று மட்டும் உறைத்தது. கல்யாணம் என்ற வார்த்தைதான் அது. உடனே அவன் மாப்பிள்ளையாகத் தீர்மானித்து விட்டான். அதுவும் எப்படி? அந்த நாட்டின் சுல்தானுடைய ஒரே மகளை மணந்துகொண்டு! ஒரு தடவை இளவரசி தன் தோழிகளுடன் பவனி வரும்போது பார்த்திருந்தான். அவள் அழகு அவன் மனக்கண்ணில் வந்து ஆடியது.

''அம்மா! நீ இப்போதே போ. நேரே சுல்தானிடம் போய் அவருடைய மகளை நான் மணக்க விரும்புவதாகக் கூறு'' என்றான் வழுக்கைத் தலையன்.

''என்ன.....?'' என்று கிறீச்சிட்டாள் அவன் தாயார். அவள் கண்கள் பிதுங்கிக் கீழே விழுந்து விடும்போல் ஆகியது. ''உனக்கென்ன பைத்தியமா? உன் தலை முழுதும் சுருள் சுருளாக முடி மூடி யிருந்தாலும்கூட இந்த எண்ணம் உனக்கு ஏற்பட்டதற்காக உன் தலையைச் சீவித் தள்ளிவிடுவாரே. அப்பனே! நாம் இப்படியே, தலை உடலோடு இருக்கும்படியாக இருப்போம்'' என்றாள்.

''சுல்தான் தயாள குணமுள்ளவர் அம்மா. நீ போய் அவரிடம் நான் சொன்னபடி கேளு.''

''இப்படித் தகாத ஓர் ஆசைப்பட்டதற்காக நம் இருவருக்கும் உயிர்ப்பிச்சை அளித்தாலும் அளிக்கலாம். ஆனால் ஒட்டாண்டியும் வழுக்கைத் தலையனுமான உனக்கு அவர் தம் அருமை அழகு மகளை மனைவியாக்கித் தரவே மாட்டார்'' என்று பிடிவாதமாக அரண்மனைக்குப் போய் அவமானப்பட மறுத்துவிட்டாள் தாயார். ஆனால் வழுக்கைத் தலையனும் விடுவதாக இல்லை. தினமும் தாயாரிடம் நச்சரித்துக் கொண்டே யிருந்தான். அவன் தொல்லை தாங்காத அவளும் ஒரு நாள் தன்னிடமிருந்த நல்ல ஆடையை அணிந்துகொண்டு தர்பாருக்குக் கிளம்பினாள் சுல்தானைச் சந்திக்க.



வந்த யோகம்

வாண்டு மாமா

அவள் அதிர்ஷ்டம், அன்று மன்னர் மக்களின் குறைகளை நேரடியாகக் கேட்டறிந்து பரிகாரம் நல்கும் நாள். சுல்தானை யார் வேண்டுமானாலும் காணலாம். தங்கள் விருப்பத்தைக் கூறலாம். ஏழைத் தாயாருக்குச் சுல்தானைச் சந்திப்பதில் சிரமம் ஏற்படவில்லை. சுல்தான் நல்லவர். ஆகவே அவளுடைய விநோதமான விருப்பத்தைக் கேட்டுக் கோபப்படவில்லை. ''உன்னுடைய மகனை நேரில் வரச் சொல். அவன் தன் ஆசையை என் முன்னிலையிலேயே கேட்கலாம். அதனால் ஆபத்து ஏதும் ஏற்படாது'' என்றார்.

அதன்படியே வழுக்கைத் தலையன் சுல்தான் முன் வந்து மண்டியிட்டு நின்றான். அவனது பளபளக்கும் தலையைக் கண்டதுமே மன்னர் இந்த அவலட்சண முட்டாளை எப்படியாவது தட்டிக் கழிக்க எண்ணம் கொண்டார். ''வாலிபனே! நீ என் ஒரே மகளை மணக்க விரும்புவதாக அறிந்தேன். ரொம்ப சந்தோஷம். ஆசைப்பட யாருக்கும் உரிமை உண்டு. ஆனால் அதை அடையும் தகுதியுடையவனாக ஆக வேண்டாமா? என் மகளை மணக்கக் கூடியவன்; இந்நாட்டிலுள்ள அழகிய பாடும், பேசும் பறவைகளை யெல்லாம் அரண்மனைத் தோட்டத்திலுள்ள மரங்களில் வந்து கூடு கட்டிக்கொண்டு வசிக்கும்படி செய்ய வேண்டும். உன்னால் அது முடியுமானால் நான் என் மகளை உனக்கு மனைவியாக்கத் தயங்க மாட்டேன்'' என்றார்.

வழுக்கைத் தலையனுக்குப் பெருத்த ஏமாற்றமாகி விடடது. இருந்தாலும் முழந்தாளிட்டு வணங்கி விட்டு விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்தான். சுல்தான் விருப்பத்தை நிறைவேற்றத் தனக்கு உதவக் கூடியவர்களைத் தேடிக் கிளம்பினான். மந்திரசக்தி இல்லாமல் உலகில் உள்ள அழகிய பாடும் பேசும் பறவைகளை யெல்லாம் சுல்தானின் அரண்மனைத் தோட்டத்துக்கு வரவழைக்க முடியாதென்பதை அவன் அறிவான். பல நாட்கள் பாலைவனத்தில் சுற்றியலைந்த பிறகு அவனுடைய அதிர்ஷ்டம் ஒரு மந்திரவாதியை அவன் முன்னால் கொண்டு வந்து நிறுத்திற்று.

''மகனே! உன் கவலையின் காரணம் என்ன?'' என்று கேட்டார் மந்திரவாதி. வழுக்கைத் தலையன் எல்லாவற்றையும் கூறினான். ''இளவரசியை






மணக்க நான் எதையும் செய்யத் தயாராக இருக்கிறேன். ஆனால் என்ன செய்தால் பறவைகளை வரவழைக்கலாம் என்று தெரியவில்லையே!'' என்றான்.

''நம்பிக்கையை இழக்காதே. இத்தகைய உறுதி உள்ள உனக்குத் தோல்வி ஏற்படாது. நான் உனக்கு ஒரு மந்திரம் சொல்லித் தருகிறேன். அதை எப்படி உபயோகிக்க வேண்டுமென்பதையும் கூறுகிறேன். இந்தப் பாலைவனத்தின் கோடியில் ஒரு பெரிய ஆலமரம் இருக்கிறது. உலகிலுள்ள அத்தனை பறவைகளும் ஒவ்வொரு நாள் இரவும் அந்த மரத்தில் வந்து தங்கும். அந்த மரத்தினடியில் போய் ஒளிந்து கொள். எல்லாப் பறவைகளும் வந்து அடையும் வரையில் பொறுமையாகக் காத்திரு. பிறகு நான் சொல்லித் தரும் மந்திரத்தைக் கூறு. எல்லாப் பறவைகளும் அப்படியே மயங்கிப் போகும். நீ சொன்னபடியெல்லாம் கேட்கும். நீ ஏதும் சொல்லா விட்டால் அப்படியே சிலைகளைப் போல் அசைவற்றுக் கிடக்கும். மயங்கிய நிலையிலுள்ள பறவைகளை நீ மரத்தின்மீது ஏறி உன்னால் முடிந்த அளவுக்கு அவைகளை எடுத்து உன் தலை, கை, தோள் எல்லாவற்றிலும் அமர்த்திக் கொள். மற்றவைகளைப் பார்த்து அந்த மந்திரத்தைச் சொல்லி 'என்னைப் பின்தொடர்ந்து வாருங்கள்' என்று கட்டளையிட்டு விட்டு நட. எல்லாப் பறவைகளும் உன் பின்னாலேயே வரும். அவைகளிடமுள்ள மந்திர சக்தியை விடுவிக்க அந்த மந்திரத்தைக் கூறி, இதனால் கட்டுண்ட இவைகள் இனி விடுதலை பெறட்டும்'' என்று கூறு. அவைகளும் மந்திர சக்தியிலிருந்து விடுபட்டுச் சுய உணர்வடையும்'' என்று கூறி அவன் காதோடு அந்த மந்திரத்தைக் கூறினார் மந்திரவாதி.

வழுக்கைத் தலையன் மந்திரவாதிக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு ஆலமரத்தைத் தேடி ஓடினான். மந்திரவாதி விவரித்தபடியே பறவைகளெல்லாம் நள்ளிரவில் மரத்தில் வந்து அடைந்தன. மந்திரமும் பலித்தது. வழுக்கைத் தலையன் முடிந்த அளவு பறவைகளைத் தன் உடலில் ஏற்றிக் கொண்டு மற்றவைகளைப் பின்தொடரச் செய்து அரண்மனைக்குக் கிளம்பினான்.

பறவைக் கூட்டத்தினிடையே பறவை மரம் போலத் தர்பாருக்குள் நுழைந்த வழுக்கைத் தலையனைக் கண்ட சுல்தானுக்கு வியப்பினால் பேசவே வரவில்லை. அடுத்த விநாடி அத்தனை பறவைகளும் கலகலவென்று இனிமையான ஒலி எழுப்பியபடி அரண்மனைத் தோட்டத்தில் உள்ள அத்தனை மரங்களிலும் போய் உட்கார்ந்து கொண்டு பாடலாயின.



"சுல்தான் அவர்களே! உங்கள் நிபந்தனையை நிறைவேற்றிவிட்டேன். உங்கள் மகளை எனக்கு மனைவியாக்குங்கள்" என்றான் கண்ணாடித் தலையன்.

"அவசியம், அவசியம்! திருமண ஏற்பாடுகளை நான் உடனே செய்கிறேன். பெரிய மந்திரவாதியான நீயும் உன் தலையில் அடர்த்தியான முடி — சுருள் முடிதான் உன் முகத்துக்கு ஏற்றதாக இருக்கும் — வளர்த்துக் கொண்டு தயாராக வந்துவிடு. இளவரசியும் சந்தோஷப்படுவாள்" என்றார் சுல்தான்.

மறுபடியும் பாவம், வழுக்கைத் தலையனுக்கு வருத்தமான வருத்தம். அவன் வழவழத் தலையில் கருகரு முடி எப்படி முளைக்கும்? இருந்தாலும், மன்னரை வணங்கி விடைபெற்றுக் கொண்டான்.

அரசர் முட்டாளா, வழுக்கைத் தலையனுக்குத் தம் பெண்ணை மணம் செய்து கொடுக்க? பிரதம மந்திரியைக் கூப்பிட்டார். "வஸீர்! உடனே என் மகளுக்குத் தகுந்த ஒரு வரனைப் பார்த்து நாளையே திருமணத்தை முடித்துவிட வேண்டும். ஏன், உமது மகன் இருக்கிறானே. அவனைவிடவா சிறந்த மாப்பிள்ளை கிடைக்கப் போகிறான்? நாளைக்கே உமது மகனுக்கும் எனது மகளுக்கும் கல்யாணம்" என்றார் சுல்தான்.

வழுக்கைத் தலையனுக்குச் சுல்தானின் சதிச் செயல் எட்டியது. மறுநாள். அரண்மனைக்கு வந்து ஓர் இடத்தில் ஒளிந்து கொண்டான். மணப்பெண்ணை அலங்கரித்து அழைத்துப் போனார்கள் தோழிகள். கல்யாண மண்டபத்தில் எல்லாருமே கூடிவிட்டார்கள், சுல்தானைத் தவிர. ஒரு தூணின் மறைவிலிருந்த வழுக்கைத் தலையன் மந்திரவாதி பறவைகளை மயங்கச் செய்யச் சொல்லிக் கொடுத்த மந்திரத்தைக் கூறினான். அவ்வளவுதான்; மண்டபத்திலிருந்த அத்தனை பேரும் சிலைகளைப் போலாகிவிட்டார்கள். அசையவே இல்லை.

சுல்தான் வந்தார். பார்த்தார். மணமகன், மணமகள், மந்திரி பிரதானிகள் எல்லோருமே சிலைகளாகிச் சலனமற்றுக் கிடப்பதைக் கண்டார். கண் கலங்கினார். நாட்டிலுள்ள பெரிய பெரிய மந்திரவாதிகளையும் பக்கிர்களையும் வரவழைத்து மயங்கிக் கிடக்கும் அவர்களை உயிர்ப்பிக்க மார்க்கம் தேடும்படி கேட்டுக் கொண்டார்.

அவர்களோ, "மன்னா! குற்றம் உம்மீதுள்ளது. சொன்ன வாக்குப்படி நடக்காததினால்தான் இந்த நிலை. இவர்களைக் கட்டியிருக்கும் மந்திரத்திலிருந்து விடுவிக்க ஒரே வழி இந்த மணமகனை அனுப்பிவிட்டு அந்த இடத்தில் வழுக்கைத் தலையனை மணமகனாக்குவதுதான்" என்று ஒருமிக்கக் கூறிவிட்டார்கள்.

பாவம், சுல்தான் வேறு வழியின்றி வழுக்கைத் தலையன் வீட்டுக்கு வீரர்களைப் பல்லக்குடன் அனுப்பினார். அவன் அம்மா இலேசுப்பட்டவளா?

"ஐயோ! என் அருமைப் பிள்ளையைப் பல நாட்களாகக் காணோமே. என்னிடம் பணம் காசு இருந்தாலும் அவனைத் தேடிக் கண்டுபிடித்துச் சொல்வேன். எதுவுமில்லாத ஏழை நான்" என்று நாடகமாடினாள்.

"அதற்காக வருந்த வேண்டாம். இதோ வேண்டிய பணம்" என்று ஒரு மூட்டை நிறையப் பொற்காசுகளைக் கொடுத்து, "விரைவில் உங்கள் மகனைத் தேடிக் கண்டுபிடித்து அரண்மனைக்கு அழைத்து வா" என்று கூறிவிட்டுப் போனார்கள் வீரர்கள்.

அன்றிரவே வழுக்கைத் தலையன் தன் வீட்டுக்குள் வந்தான். பல நாட்கள் யார் கண்ணிலும் படாமல் வீட்டுக்குள்ளேயே சுகமாகச் சாப்பிட்டுக் கொண்டு ஒளிந்திருந்தான். அரண்மனையிலோ மந்திரத்தினால் கட்டுண்ட அத்தனை



பேரும் இத்தனை நாட்களும் அப்படியே இருந்தார்கள். பல நாட்கள் கழித்து ஒருநாள், எங்கோ வெளிநாட்டிலிருந்து திரும்பி வருபவன் போல் அரண்மனைக்குப் போனான் வழுக்கைத் தலையன்.

''மாப்பிள்ளை! மாப்பிள்ளை ! எங்கே போய்விட்டீர்கள் இத்தனை நாட்களும்?'' என்று உபசாரத்துடன் வரவேற்றார் சுல்தான்.

''நியாயமான முறையில் உங்கள் மகளை நான் பரிசாகப் பெற்றேன். ஆனால் நீங்கள் அவளை எனக்கு மனைவியாக்க விரும்பவில்லை. ஆகவே, எனக்கு வீடும் நாடும் வாழ்வும் வெறுத்துப் போச்சு. கால் போன திசையில் சுற்றினேன், மனச் சாந்திக்காக. இப்போது என் உரிமையைப் பெற வந்திருக்கிறேன். உங்கள் வஸீரைக் கூப்பிட்டுத் திருமணத்துக்கான ஏற்பாட்டைச் செய்யச் சொல்லுங்கள்'' என்றான்.

வஸீர் திருமண ஒப்பந்தம் தயாரித்தார். வேறு வழியின்றிச் சுல்தான் தம் ஒப்புதலை அளிக்க அதில் முத்திரை மோதிரத்தைப் பதித்தார்.

வழுக்கைத் தலையனும் மந்திரத்தைக் கூறி 'உன் பிடியிலிருந்து இவர்களெல்லாம் விடுபட வேண்டும்' என்று கூறினான். எல்லோரும் சுய உணர்வு பெற்றார்கள். இளவரசிக்கும் வழுக்கைத் தலையனுக்கும் கோலாகலமாகத் திருமணம் நடந்தது. அடடே ! ஒரு ரகசியத்தை உங்களுக்குச் சொல்லவில்லையே ! இப்போது அவன் வழுக்கைத் தலையனல்ல. ஏன் தெரியுமா? அடர்த்தியான சுருள் முடிகளைத் தன் பளபளத்த தலையில் வைத்து மந்திரத்தைக் கூறினான். அவை அவன் தலையில் அப்படியே நிரந்தரமாக நின்றுவிட்டன, நிஜமான சுருள் முடியைப் போலவே. ஆகவே, இளவரசிக்கும் மகிழ்ச்சியான மகிழ்ச்சி.

சுருள் முடியனும் சுந்தர வதனியும் கணவனும் மனைவியுமாக — ராஜாவும் ராணியுமாக — சுல்தானும் பேகமுமாக ரொம்ப காலம் சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்கள்.

'கோகுலம்தான்' வாங்கவே ஸ்கூட்டர் ஏறிச் செல்கிறோம்!

புகைப்படங்கள் :
நெல்லை ஆ. கணபதி

வி. ஆர். ரமணி





யானை பிடிக்கத் தெரியுமா உங்களுக்கு?

புகைப்படம்: ஜி. ராமமூர்த்தி





டூப்ளிகேட் மாமா

"அத்திப்பூ"

சின்னப் பையன் சிவசாமி
சிரிப்பாய் ஒருநாள் மாமாவை
எண்ணப் படியே கேட்டுவிட்டான்
''எனக்கு வேண்டும் கடிகாரம்''

அழகாய் மாமா கடிகாரம்
அன்றே வாங்கிக் கொடுத்தாரே!
பழகும் நண்பர் பலரிடமும்
பாங்காய் அதனைப் பாராட்டி
சிலநாள் காட்டித் திரிந்திட்டான்
செயலில் ஊக்கம் காட்டிட்டான்
உளத்தில் மகிழ்ச்சி பெற்றுநிதம்
உருகும் மெழுகுபோலானான்

ஒருநாள் மாலை ஊர்ப்புறத்தே
ஒதுங்கி நின்று விளையாடித்
தெருவில் வந்து தன்கையைத்
திருப்பி மணியைப் பார்க்கையிலே
பெருமை மிக்க கடிகாரம்
பிரிந்து போன மாயத்தை
உருகும் உளத்தால் உணர்ந்தவனும்
உயிர்விட் டழுவே செய்தானே !

மாமா தந்த கடிகாரம்
மாய மாகப் போனவிதம்
தாமாய்ப் போய்த்தன் தந்தையிடம்
தயங்கித் தயங்கிச் சொன்னானே !
மாமா வந்தார் ஒருநாளில்
மயங்கி நின்றான் சிவசாமி ;
பாமா என்னும் அவன்தங்கை
பக்குவ மாகச் சொல்லிவிட்டாள்

வயிறு முழுதும் குலுங்கிடவே
வந்த மாமா சிரித்தாரே !

எதுவும் பேச வில்லையவன்
ஏனோ 'உம்'மென் றிருந்திட்டான்

மாமா சொன்னார்: ''மருமகனே!
மகிழ்வா யுனக்கு நான்தந்த
சீமான் வீட்டுக் கடிகாரம்
சில்லறை யாக விலைதொகையே!
யார்யா ருக்கு எதுவேண்டும்
என்று எனக்குத் தெரியாதோ?
தீர்தீர் உந்தன் சோகத்தை
சிரிப்பில் காட்டுன் வேகத்தை!''

'கடிகா ரத்தால் மாமாவும்
காட்டி விட்ட புதுப்பாடம்
படிப்பால் வந்த பாடமல்ல ;
பயனும் அனுபவப் பாடமிது '
என்றே உணர்ந்தான் சிவசாமி
எழுந்து மிக்க மகிழ்வாக
நன்றே மாமா விடம்சென்று
நகைச்சுவை யாகச் சொன்னானே

''இன்றே மாமா என்னோடு
இருந்த எண்ணம் ஒழிந்ததுவே
நன்றே எனினும் தகுதிபெற்று
நானே பெற்று மகிழ்வேனே !''

துள்ளிக் குதிக்கும் சிவசாமி
துடுக்குத் தனத்தை விட்டானே !
பள்ளி செல்லும் போதெல்லாம்
படிப்பு ஒன்றே நினைத்தானே!
மாமா வுக்குப் புதுப்பட்டம்
மகிழ்வாய்ச் சூட்டி மகிழ்ந்திடவே
பாமா 'டூப்ளிகேட் மாமா'வைப்
பரிகசித்தே நின்றாளே !

உபகோஸலன்

ரா. கணபதி

ஜாபால ஸத்தியகாமர் என்ற ஒரு மகரிஷி இருந்தார். அவரிடம் பல சீடர்கள் கல்வி பயின்றனர். அவர்களில் ஒருவர் உபகோஸலன். காமலர் என்ற வேதியரின் மகன் உபகோஸலன்.

ஜாபாலரின் வேள்வித் தீயைப் பன்னிரண்டு ஆண்டுகள் காத்துப் போற்றி வந்தான் உபகோஸலன்.

மற்ற மாணவர்களுக்குக் கல்வியைப் பூர்த்தி செய்வித்தார் ஜாபாலர். கல்வியின் இறுதியில் செய்யப்படும் 'ஸமாவர்த்தனம்' என்ற சடங்கையும் அந்தச் சீடர்களுக்குச் செய்து அவர்களை அவர்களது வீடுகளுக்குத் திருப்பியனுப்பினார். ஆனால் உபகோஸலருக்கு மட்டும் கல்வியை முடித்து வைத்து ஸமாவர்த்தனம் செய்யவில்லை.

அவனது பொறுமையின் பெருமையை உலகம் அறிய வேண்டும் என்பதற்காகவே இவ்விதம் அவனைச் சோதித்தார்.

இதைக் கண்ட ஜாபாலரின் மனைவிக்கு மிகுந்த வருத்தம் ஏற்பட்டது. குருபத்தினிகள் சீடர்களைப் பெற்ற பிள்ளை போல் கருதி அன்புடன் வளர்ப்பார்கள். ஸத்தியகாம ஜாபாலரின் மனைவி உபகோஸலனுக்குத் தாய்போல் அன்பு காட்டியவள்.

இப்போது அவள் கணவரிடம் சென்று, "உபகோஸலன் பன்னிரண்டு ஆண்டுகள் சிறந்த ஒழுக்கத்துடன் வாழ்ந்து, உங்களுடைய அக்கினியை முறைப்படி காத்து, வழிபட்டு வந்திருக்கிறான். அவனுக்கு நீங்கள் கல்வி முடித்து ஸமாவர்த்தனம் செய்யாமல் இருக்கலாமா? இவ்விதம் நீங்கள் அலட்சியம் செய்ததைக் கண்டு அந்த நல்ல பிள்ளை கோபிக்காமல் இருக்கலாம். ஆனால் அவனால் வளர்க்கப்பட்ட உங்களுடைய அக்கினியே உங்களை வெறுத்துச் சபிக்கும். எனவே, அவனுக்கு எல்லா உபதேசங்களையும் அளித்துக் கல்வியை முடித்து வைப்பீராக" என்று கூறினாள்.


ஜாபாலர் அதற்கு ஏதுமே விடை சொல்லாமல் வெளியே சென்றார்.

இதையெல்லாம் அறிந்த உபகோஸலனுக்கு அன்று உணவே பிடிக்கவில்லை. அவனுக்கு உள்ளத்தில் நோய் ஏற்பட்டது போலிருந்தது.

"குழந்தாய்! உண்பதற்கு வா! ஏன் இப்படி உண்ணாமல் இருக்கிறாய்?" என்று அன்புடன் அழைத்தாள் குருபத்தினி.

"அம்மா! என் விருப்பம் நிறைவேறவில்லை. ஒரே குழப்பமாயிருக்கிறது. உள்ளம் நோய்வாய்ப் பட்டிருக்கிறது. எனக்கு உணவும் மனமில்லை" என்றான் உபகோஸலன்.

'அக்கினி உம்மை வெறுக்கும்' என்று ஸத்தியகாமரிடம் அந்த அம்மாள் கூறினாள் அல்லவா? அக்கினிக்குள்ளும் கடவுள் சக்தி இருக்கிறது. அந்தச் சக்தியே அவரது கடுமையைக் கண்டு அவரை வெறுக்கும் என்று அவள் கூறினாள். உபகோஸலன் உணவும் உட்கொள்ளாமல் குருவின் உபதேசத்துக்காக ஏங்குவதை அக்கினிக்குள்ளிருந்த கடவுள் சக்தி உணர்ந்து, உடனே அக்கினி ஜாபாலரை வெறுப்பதற்குப் பதில் உபகோஸலனிடம் அன்பு கொண்டது. "இந்தப் பிள்ளை அல்லவோ இத்தனை



ஆண்டுகளாக நம்மைக் காத்து வந்தான்! எனவே நாமே இவனுக்கு உபதேசம் அளிப்போம்'' என்று அக்கினி எண்ணியது.

உடனே அக்கினியானது உபகோஸலனுக்கு உபதேசம் அளிக்கத் தொடங்கி விட்டது. 'மனிதனின் உயிருக்குள்ளேயே கடவுள் இருக்கிறார். மனிதனின் இதயத்துக்குள்ளேயே அழியாத ஆனந்தம் இருக்கிறது' என்ற பெரிய உபதேசத்தை உபகோஸலனுக்கு அக்கினி போதித்தது.

வெளியே சென்றிருந்த ஸத்தியகாமர் திரும்பினார்.

முன்னொரு காலத்தில் ஸத்தியகாமரிடம் அவரது குருவான ஹாரித்ருதமர், ''உன் முகத்திலேயே அறிவொளி வீசுகிறதே! உனக்கு யார் உபதேசித்தார்கள்?'' என்று கேட்டதுண்டு அல்லவா? இப்போது அக்கினியிடமிருந்து உபதேசம் பெற்றதால் அறிவொளி பெற்றிருந்த உபகோஸலனைப் பார்த்து அதே கேள்வியைக் கேட்டார் ஸத்தியகாமர். ''என்னப்பா, உபகோஸலா! கடவுளை அறிந்தவன்போல் உன் முகத்தில் ஒளி வீசுகிறதே! உனக்கு யார் உபதேசித்தது?'' என்று வினவினார்.

ஹாரித்ருமதர் இந்தக் கேள்வியைக் கேட்டபோது ஜாபாலர் உண்மையைக் கூறுவதற்கு எப்படிக் கூசினாரோ, அவ்விதமே இப்போது அடக்கத்தால் வெட்கம் கொண்டான் உபகோஸலன்.


''ஐயனே! எனக்கு யார் உபதேசிப்பார்கள்? ஒன்றுமில்லை. இப்போது அடங்கியிருக்கும் இந்த அக்கினி சிறிது நேரத்துக்கு முன் ஜொலித்தது'' என்றான். அப்படிச் சொன்னதிலிருந்தே குரு விஷயத்தைப் புரிந்து கொள்வார் என்று கருதினான்.

ஸத்தியகாமரும் புரிந்து கொண்டார்.

''அக்கினி என்ன உபதேசித்தது?'' என்று வினவினார்.

அக்கினியின் உபதேசத்தைக் கூறினான் உபகோஸலன். ''தாங்களே எனக்குச் சகல உபதேசமும் அருள வேண்டும்'' என்று குருவை வேண்டிக் கொண்டான்.

ஸத்தியகாம ஜாபாலர் உபகோஸலனுக்கு உயர்ந்த உண்மைகளை உபதேசித்து, ஸமாவர்த்தனம் செய்வித்து, அவனது வீட்டுக்குத் திரும்ப அனுப்பி வைத்தார்.





பிரகாசமான பரிசு

கிருஷ்ணவேணி

அலாஸ்கா தேசத்தில் வாழும் எஸ்கிமோக்களுக்குச் சூரிய வெளிச்சம் என்றால் என்ன என்றே தெரியாது. அலாஸ்காவில் எப்போதுமே இருட்டுத் தான். கறுப்பு வெல்வெட்டைப் போல் வானம் எப்போதுமே இருள் மூடிக் கிடக்கும். பகல் எது, இரவு எது என்று யாருக்குமே தெரியாது. அதனால் வேலை செய்வது எப்போது, தூங்கப் போவது எப்போது என்றும் பாவம் அவர்களுக்குத் தெரிவதில்லை. அலாஸ்கா நாடு முழுவதும் வெளிச்சத்தைப் பற்றி அறிந்திருந்த ஒரே ஒரு ஜீவன் காக்கை தான். காக்கையை ரொம்பப் புத்தி சாலி, அறிவாளி, தந்திரக்காரன் என்று எஸ்கிமோக்கள் மதித்தனர்.

ஒரு நாள் காகம் எஸ்கிமோக்களிடம் ''பகல் வெளிச்சம் இங்கு இருக்குமானால் எத்தனையோ உபயோகமாக இருக்கும்'' என்று கூறியது.


''பகல் வெளிச்சமா? அப்படியென்றால் என்ன? அது எப்படி இருக்கும் ? அப்படி ஒரு பொருளைப் பற்றி நாங்கள் கேட்டதுகூட இல்லையே !'' என்றார்கள் எஸ்கிமோக்கள். ஆனால் பல தேசங்களுக்கும் போய் வரக்கூடிய காக்கையின் வார்த்தையில் அவர்களுக்கு அபார நம்பிக்கை.

'' பகல் வெளிச்சம் மட்டும் இங்கு இருக்குமானால் வெகு தூரத்திலுள்ள மிருகங்களையும்கூட நீங்கள் பார்க்கலாம். பனிப் பிரதேசத்தில் வழி தவறாமல் பத்திரமாகப் போகலாம். வெகு தூரத்தில் மலை மீதுள்ள காடுகளுக்கும் கூட ஸீல் எண்ணெய் விளக்கு இல்லாமல் போகலாமே.... உங்கள் விளக்குகளுக்குப் பயன்படுத்தும் அந்த ஸீல் எண்ணெயை நினைத்தாலே என் வயிற்றைக் குமட்டுகிறது'' என்று மூக்கைத் தூக்கியது காகம்.

''வாஸ்தவம்தான். எங்களுக்குப் பகல் வெளிச்சம் தேவைதான். காக்கையாரே ! நீர் ரொம்ப அறிவாளி. எங்களுக்காகக் கொஞ்சம் பகல் வெளிச்சம் கொண்டு வந்து தாருங்களேன் !'' என்றார்கள் எஸ்கிமோக்கள்.

'' அதற்கென்ன, கொண்டு வந்து தருகிறேன். ஆனால் கொஞ்சமாகத் தான் என்னால் கொண்டு வர முடியும். அதைப் பத்திரமாகக் காப்பாற்றிப் பெருக்கிக் கொள்ள வேண்டியது உங்கள் திறமையைப் பொறுத்தது.''

''ஒன்றுமே இல்லாததற்குக் கொஞ்சமாவது கிடைக்கிறதே, அது மேலல்லவா?'' என்று அலாஸ்கா வாசிகள் காக்கையின் நிபந்தனைக்கு ஒப்புக் கொண்டார்கள்.



காக்கை தன் நெடுந் தூரப் பயணத்தைத் தொடங்கியது, இருளிலிருந்து தெற்குத் திசையிலுள்ள சூரியனை நோக்கி. பறந்து பறந்து....பறந்து... கொண்டேயிருந்தது. அது மிக மிக நீண்ட பயணம். அதன் இறக்கைகள் சோர்வுற்றன. முடிவாகக் கானகத்தின் கோடியிலே முகாமிட்டிருந்த செவ்விந்தியர்களுடைய தலைவனின் பெரிய கூடாரத்தின் (டீப்பீஸ்) ஜன்னல் வழியாகவே பகல் வெளிச்சம் ஒளி வீசுவதைக் கண்டது காக்கை. ''அப்பாடா, இனிமேல் அலைய வேண்டாம்!'' என்று அங்கிருந்த ஒரு மரத்தின் கிளையில் உட்கார்ந்தது. நெடுந் தூரம் பறந்து வந்த களைப்பு நீங்கக் காத்துக் கிடந்தது. அது அமர்ந்திருந்த மரத்துக்குக் கீழே பனி உருகி ஒரு பாறை வழியே வழிந்து கொண்டிருந்தது. கொஞ்ச நேரத்துக்கெல்லாம் கூடாரத்துக்குள்ளிருந்து ஒரு பெண் வெளியே வந்தாள். அவள் செவ்விந்தியத் தலைவனின் மகள். அவள் கையில் ஸீல் மிருகத்தின் தோல்பை இருந்தது. உணவு சமைக்கவும், குடிக்கவும் தண்ணீரை அந்தத் தோல் பையில் தான் நிரப்பிக் கொண்டு போவார்கள். அந்தப் பெண் காகம் அமர்ந்திருந்த மரத்தடியில் உள்ள ஓடைக்கு வந்தாள், நீர் நிரப்பிக் கொள்ள. காக்கை உடனே தன் உருவத்தை மாற்றிக் கொண்டது. அது மந்திர சக்தி பெற்ற காக்கை. காக்கைச் சட்டையை மரத்திலேயே வைத்துவிட்டுப் புழுதியாக மாறி அந்தப் பெண்ணின் தோல் ஆடையில் போய் ஒட்டிக் கொண்டது..

குடிநீருடன் கூடாரத்துக்குத் திரும்பினாள் பெண். அவளுடன் புழுதியாக மாறியிருந்த காகமும் உள்ளே சென்றது. அங்கே தரையில் ஒரு கொழு கொழு குழந்தை பளீரென்ற சூரிய வெளிச்சத்தில் படுத்தபடி விளையாடிக் கொண்டிருந்தது. காக்கைப் புழுதி பெண்ணின் உடையிலிருந்து அந்தக் குழந்தையின் காதோரத்தில் போய் உட்கார்ந்து கொண்டது. சும்மா இருக்குமா ? குழந்தையின் காதில் நமைச்சலை உண்டாக்கியது. அதனால் குழந்தை அழலாயிற்று.

'' என்னடா, ராஜா, வேணும் உனக்கு? ஏன் அழுகிறாய்?'' என்றார் குழந்தையின் தகப்பனார். அவர் ரொம்பப் பாசமுள்ளவர். காதோரத்தில் இருந்த புழுதி குழந்தையின் காதோடு, ''பகல் வெளிச்சம் வேண்டும் என்று கேள்'' என்று கிசுகிசுத்தது. குழந்தையும் அப்படியே சொல்லிற்று.



தன்னுடைய மூத்த மகளிடம் தகப்பனுர், ''குழந்தை விளையாட ஒரு சிறிய உருண்டையான பகல் வெளிச்சத்தைக் கொடு'' என்று கூறினுர். அந்தப் பெண் செவ்விந்தியத் தலைவனின் வேட்டைப் பையிலிருந்து ஒரு சின்ன அழகான பெட்டியை எடுத்தாள். அதிலிருந்து கொஞ்சம் பகல் வெளிச்சத்தை எடுத்துப் பளபளக்கும் பந்தாக உருட்டிக் குழந்தையிடம் கொடுத்தாள். குழந்தை தகதகக்கும் அந்தப் பந்துடன் விளையாட ஆரம்பித்தது. ''நான் தூக்கிச் செல்லுவதற்கு ஏற்ற அளவு இதுதான்'' என்று எண்ணி மகிழ்ந்தது காக்கை. ''ஆனல் இதை எப்படி எடுத்துச் செல்லுவது? அதற்கு ஒரு வழி செய்ய வேண்டும்'' என்று தீர்மானித்தது புத்திசாலியான காக்கை. குழந்தையின் காதோடு கிசுகிசுத்தது. ''இந்தப் பகல் வெளிச்சப் பந்தை ஒரு கயிற்றில் கட்டிக் கொடுக்கச் சொல் உன் அக்காவை. கயிற்றைப் பிடித்து இழுத்தால் அது தரையில் உருண்டு உருண்டு துள்ளுவது வேடிக்கையாக இருக்கும்.''

குழந்தையும் காக்கை சொன்ன படியே கேட்டது. அதன்படியே குழந்தையின் சகோதரியும் செய்து கொடுத்தாள். குழந்தை கயிற்றில் பிணைக்கப்பட்ட பகல் வெளிச்சப் பந்தைப் பிடித்து இழுத்து விளையாடி மகிழ்ந்து கொண்டிருந்தபோது குழந்தையின் தகப்பனுரும் சகோதரியும் கூடாரத்தில் குழந்தையை விளையாட விட்டு விட்டு எங்கோ வெளியே போனுர்கள். கூடார வாசல் திறந்திருந்தது. இதைத் தான் காகமும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

''பகல் வெளிச்சப் பந்தை இழுத்துக் கொண்டு வெளியே வா. அதை ஆகாயத்தில் வீசிச் சுழற்றினல் நன்ருக இருக்கும்'' என்றது காக்கை, குழந்தையின் காதில். குழந்தையும் கயிற்றைப் பிடித்து இழுத்தபடி கூடாரத்துக்கு வெளியே தவழ்ந்து வந்தது. அடுத்த விநாடி புழுதி, மரக்கிளையில் விட்டு வந்த தன் காக்கை உடலில் போய்ப் புகுந்து தன் நிஜ உருவை அடைந்தது. குழந்தையிடமிருந்து பகல் வெளிச்சத்தைக் கட்டியிருந்த கயிற்றின் மறு முனையைப் பிடித்துக் கொண்டு ஜிவ்வென்று ஆகாயத்தில் பறந்தது.


தன்னிடமிருந்து விளையாட்டுப் பொருள் பிடுங்கப்பட்டதும் குழந்தை 'வீல்' என்று அழுதது. ஆனல் காகம் நிற்குமா? பகல் வெளிச்சம் கயிற்றில் ஊசலாடத் தன் தாய்நாட்டை நோக்கிக் கிளம்பி விட்டது. நெடுந்தூரப் பயணமாயிற்றே.

அலாஸ்காவுக்கு அருகே வந்ததும், காக்கைக்கு ஓர் ஆசை தோன்றியது. பகல் வெளிச்சம் எப்படிச் செயல்படுகிறது என்பதைப் பார்க்க வேண்டுமென்று. பகல் வெளிச்சப் பந்தைத் தன் கால் விரல்களுக்கிடையே வைத்துக்கொண்டு நகங்களால் கீறியது. அப்போது அதிலிருந்து ஒளிப் பொறிகள் உதிர்ந்தன. ஒரு கிராமத்தின் மீதாக அந்த ஒளிச் சிதறல்கள் உதிரவே அந்தக் கிராமமே ஒளியில் குளித்த மாதிரி தோன்றியது. காகத்துக்கு வியப்பான வியப்பு. மகிழ்ச்சியான மகிழ்ச்சி. இப்படியே ஒவ்வொரு கிராமத்தின் மீதும் கொஞ்சம் கொஞ்சம் பகல் வெளிச்சத்தைத் தன் கால் நகங்களால் கீறி உதிர்த்து ஒளி ஏற்றிக் கொண்டே போயிற்று. கடைசியாகத் தான் கிளம்பிய கிராமத்துக்கு வந்ததும் அந்தத் தங்கப் பந்திலே மீதமிருந்த வெளிச்சத்தை யெல்லாம் சிறு சிறு துகள்களாக்கிக் கிராமம் முழுதும் சிதறும்படி செய்தது. இருள் மூடிய மேகத்திடையே வாண வேடிக்கை போலப் பளீரென்று ஒளி வெள்ளம் பரவவே கூடாரத்திலிருந்து எஸ்கிமோக்கள் வெளியே ஓடி வந்தார்கள். காக்கை பாடுபட்டுக் கொண்டு வந்த பகல் வெளிச்சத்தின் அழகைக் கண்டு மகிழ்ந்து ஆடிப் பாடினுர்கள், மணிக் கணக்காக.

கொஞ்சம் கொஞ்சமாகப் பகல் வெளிச்சத்தின் ஒளி மங்கி இருள் மூடி இரவு வந்தது.

''நான் இன்னும் அதிகமான அளவுக்குப் பகல் வெளிச்சத்தைக் கொண்டு வந்திருக்க வேண்டும். அப்போது அலாஸ்காவில் இருளே இருந்திருக்காது. ஆனல் கிழக்கில் உள்ள செவ்விந்தியத் தலைவனின் கூடாரத்தில் வெளிச்சமே இருக்காது. தவிரவும் இதற்கு மேல் என்னல் சுமந்து வரவும் முடியாதே'' என்று முதலில் குறைப்பட்டுக் கொண்டாலும் பிறகு தனக்குத் தானே சமாதானமும் அடைந்தது காக்கை.

ஆனல் காக்கை கொஞ்சமாகக் கொண்டு வந்தாலும் பகல் வெளிச்சத்தைப் பார்த்ததற்காக எஸ்கிமோக்கள் பெரு மகிழ்ச்சி அடைந்தார்கள். தங்களிடம் கருணை கொண்டு இந்தக் காரியத்தைச் செய்ததற்காக அன்றிலிருந்து இன்று வரையும் எஸ்கிமோக்களில் யாருமே காக்கையைக் கொல்லுவதில்லை.



சிரிக்கச் சிரிக்க
சித்திரம்: செல்லம்
ஜோக் அடித்தவர்கள் பலர்
நீ எந்த மாதம் பிறந்தாய்?
மே... மே...
ஓ! மே மாதமா?
ஜான் பிரேம்சந்திரன்
எதனால் நம்முடைய பாங்க் கணக்குக் குறைந்து கொண்டே வருகிறது?
நான் வாரத்தில் ஐந்து நாட்கள்தான் சம்பாதிக்கிறேன். நீ வாரத்தில் ஏழு நாட்கள் செலவு செய்கிறாய்! அதுதான் காரணம்!
போதனூர் சாரதி
அப்பா, கருமி என்பவன் யார்?
காசு தராதவன் கருமி.
காசு என்றால் என்ன அப்பா?
க. சுதாகரன்
இந்த விடுமுறைக்கு எங்கும் போக வேண்டாம் என்பதை ஒரு புத்தகமூலம் அறிந்து கொண்டேன்.
அது என்ன புத்தகம்?
'பாங்க் பாஸ்' புத்தகம்!
செ.
கைக்கு எட்டியது...
வாய்க்கு எட்டவில்லை!
ஜி. வெங்கட்ராமன்


ஜெய் ஹனுமான்
5
கதை:
ரா. கணபதி
சித்திரம்
விஜு.
தேவகுருவான ப்ரஹஸ்பதியை விடவும் புத்திமான் நீ மாருதி! இனி நீ கற்கவேண்டியது ஏதுமில்லை. உன் நாடு சென்று துள்ளி விளையாடு.
சகல கலைகளையும் கற்றுணர்ந்தவரான ஹனுமாரிடம் குழந்தைத்தனமும் குறும்பு விளையாட்டுக்களும் போகவில்லை.
முனிவர்களின் மரவுரிகள் மொட மொட வென்றிருக்கின்றன. இதில் முண்டாசுக் கட்டிக் கொண்டால் எப்படி இருக்கும்...? ஹ..ஹ..ஹா
சீச்சீ.... இம்மரவுரிகள் உடலைக் கிழிக்கின்றன. இவைகளை நான் கிழித்துப் போடுகிறேன்.
கண் மூடித் தூங்கும் இவர்களுக்குக் குளிர்ந்த நீர் எதற்கு? என் தாகம் தீரக் குடிக்கிறேன்...



உருத்திராட்சம் உருட்டும் இவர்களுடைய கைகளுக்குத் தாங்கல் எதற்கு? இந்த பிரம்ம தண்டங்கள் என்னிடமிருந்தால் எத்தனையோ விளையாட்டுக்களை விளையாடுவேனே!
ஹனுமானின் சேஷ்டைகளால் தியானம் கலைந்து எழுந்தனர் முனிவர்கள்.
வரங்கள் பல பெற்றதினால் மமதை கொண்ட மந்தியே உன்னை யாராலும் வெல்ல முடியாதென்ற அகம்பாவத்தினால் லவா இப்படியெல்லாம் செய்கிறாய்...?
உனக்குள்ள சக்திகள் எல்லாவற்றையும் நீ மறந்து போவாயாக...
ஹனுமானுக்கு நேர்ந்த சாபம் கேட்டு அஞ்சனையும் கேசரியும் ஓடோடி வருகின்றனர்.
தவ சிரேஷ்டர்களே! அறியாத பாலகன் தெரியாமல் செய்த தவற்றை மன்னித்தருள வேணும்
கொடுத்த சாபம் கொடுத்தது தான். ஆனால் வைகுண்டநாதன் ராமனாக அவதரிக்கப் போகிறான். அவருடைய தூதனாக இவன் அருஞ்செயல்கள் பல புரியவேண்டும். அப்போது வேறொருவர் இவனுக்குள்ள சக்திகளை நினைப்பூட்டுவார். அப்போது இவன் தனது ஆற்றல்களை மறுபடி பெறுவான்.
முனிவர்களின் சாபத்தினால் தம் பலத்தை மறந்துபோன, பால் ஹனுமான் சாதுப் பிள்ளையாக வாழ்ந்து வாலிப ஹனுமானாகட்டும். அதற்குள் நாம் வேறொரு சம்பவத்தைப் பார்ப்போம்.
தொடரும்

கெஜம்

அ. ராம்கோபால்

கெஜம் என்பது மூன்றடி நீளம் அதாவது 36 அங்குலம் கொண்டது. பிரிட்டிஷ் நீட்டலளவையில் இது முக்கியமான ஓர் அளவாகும். பிரிட்டிஷார் நம் நாட்டை ஆண்டபோது இந்த நீட்டலளவை முறை நம் நாடெங்கும் அமுலில் இருந்தது. ஆகவே கெஜ அளவு பற்றிப் பலருக்குத் தெரியும். நம் நாடு சுதந்திரம் பெற்ற பிறகு இந்தப் பிரிட்டிஷ் நீட்டலளவைக்குப் பதிலாக இப்பொழுது மெட்ரிக் என்னும் பிரஞ்சு நீட்டலளவை முறை அமுல்படுத்தப்பட்டிருக்கிறது.

கெஜத்தை ஆங்கிலத்தில் 'யார்டு' (Yard) எனக் கூறுவார்கள்.... 'யர்டு' (Gyrd) என்ற சாக்கன் வார்த்தை மருவியே ''யார்டு'' என ஆகியுள்ளது. சாக்கனி என்பது கிழக்கு ஜெர்மனிக்கு முன்னுள் பெயர். அங்கு வழங்கிய மொழி சாக்கனி. பிரிட்டனில் வாழும் இங்கிலீஷ்காரரர்கள் முன்பு சாக்கனியிலிருந்து பிரிட்டனில் போய்க் குடியேறியவர்கள். ஆகவே, ''யார்டு'' என்பது மூலத்தில் ஒரு ஜெர்மன் வார்த்தை.

பிரிட்டிஷார் ஆட்சி உலகத்தின் பல பகுதிகளில் பரவியபோது அங்கெல்லாம் தங்கள் நீட்டல் அளவை முறைகளை அவர்கள் தங்கள் வசதியைக் கருதிப் புகுத்தினார்கள். ஆனால் இந்த அளவை முறை நாட்டுக்கு நாடு ஓரளவு வித்தியாசப்பட்டது. ஆகவே இதற்கென 1959 ஜனவரி முதல்தேதி உலகமகா நாடு ஒன்று கூடி ஒரு கெஜம் என்பது 0.9144 மீட்டருக்குச் சமம். ஒரு பவுண்டு (ராத்தல்) என்பது 0.45359237 கிலோகிராமுக்குச் சமம் என நிர்ணயம் செய்தது.


நம் நாட்டைப் பொறுத்தவரை கெஜம் என்பது பிரிட்டிஷார் ஆட்சிக் காலத்தில் புகுத்தப்பட்ட ஒரு புதிய நீட்டல் அளவை அல்ல. பிரிட்டிஷார் நம் நாட்டில் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு முன்பாகவே கெஜ நீட்டலளவை முறை நம் நாட்டில் அமுலில் இருந்தது.


முஸ்லிம்கள் நம் நாட்டை ஆண்ட காலத்தில் கெஜ நீட்டல் அளவு அமுலில் இருந்தது. கி.பி. 1488–1547ல் சிக்கந்தர்லோடி ஆட்சி காலத்தில் கெஜ அளவு முறை நம் நாட்டில் அமுலில் இருந்திருக்கிறது. 41½ தங்கா என்ற நாணயத்தை ஒன்றை ஒட்டி ஒன்று வைத்தால் உள்ள தூரம் அக்காலத்தில் கெஜம் ஆகும். இது சுமார் முப்பது அங்குலமாகும். இவ்விதம் நம் நாட்டில் கெஜ அளவு அமுலில் இருந்த காலத்தில் பிரிட்டனில் ஏழாவது ஹென்றியின்– ஆட்சி நடந்து கொண்டிருந்தது.

முன்பு ஒரு கோகுலத்தில் பன்னிரண்டாம் நூற்றுண்டில் இங்கிலாந்தில் வாழ்ந்த முதலாம் ஹென்றி ஒரு கெஜம் என்பதை எப்படி நிர்ணயித்தார் என்பதைக் கூறி யிருந்தது நினைவிருக்குமே. அவர் 'நீட்டிய கரத்தின் கட்டை விரலுக்கும் அவர் மூக்கு முனைக்கும் இடைப்பட்ட தூரமே ஒரு கெஜம் என்று அப்போது கணக்கிடப்பட்டதாம்.

முகலாயர் ஆட்சி காலத்திலும் கெஜ அளவு அமுலில் இருந்தது. ஹுமாயூன் ஆட்சி காலத்தில் 42 தங்காவின் நீளம் ஒரு கெஜமாக இருந்தது. அக்பர் ஆட்சி காலத்தில் 41 தங்காவின் நீளம் ஒரு கெஜமாகியது. இதற்கு அவர் ஆட்சி காலத்தில் இலாஹி கெஜம் எனப்பெயர். இதன் நீளம் சுமார் 29.6 அங்குலம். தங்கா என்பது அக்காலத்தில் செலாவணியில் இருந்த ஒரு வகை பைசா நாணயம்.

பிரிட்டிஷார் நம் நாட்டில் ஆட்சியைக் கைப்பற்றியபோது சுமார் 29 அங்குல நீளம்தான் கெஜமாக இருந்தது. முகலாயர் ஆட்சிக்கு உட்படாத பல இடங்களில் 29லிருந்து 35 அங்குலம் வரை கெஜமாக இருந்தது. இதனால் இதை ஒழுங்குபடுத்தும் நோக்குடன் தங்கள் ஆட்சியின் ஆரம்ப காலத்தில் இந்தியா முழுவதும் 33 அங்குலம் ஒரு கெஜம் என பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியார் நிர்ணயம் செய்தார்கள். 1887ல் விக்டோரியா மகாராணியின் ஆட்சி காலத்தில் ஒரு கஜம் என்பது 36 அங்குலம் என பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியார் நிர்ணயம் செய்தார்கள். அதன் பிறகு பிரிட்டிஷ் ஆட்சி காலம் முழுவதும் 36 அங்குலமே ஒரு கெஜமாக இருந்து வந்தது.







கண்கள் சுழலும் பாரீர்!

ஒரு கெட்டியான அட்டையில் A-என்ற படத்தை வரைந்து (புள்ளி யிட்ட) அதன் கண்கள் பகுதியைப் பிளேடினால் வெட்டி விடுங்கள். அதே போல, காதுக்கருகில் புள்ளியிடப்பட்ட பகுதியை நீள வாக்கில் வெட்டுங்கள். படம் B-ல் உள்ளதைப் போன்ற அட்டையை எடுத்துக் கொண்டு கண் ணின் கரு விழிகளை மட்டும் வரைந்து படம் C-ல் உள்ளவாறு இணைத்துக் கொள்ளுங்கள். B-என்ற அட்டையை இட வலமாக மாற்றி மாற்றி இழுத் தால் கோமாளியின் கண்கள் சுழலு வதைக் காணலாம்! -இரத்தினம்

அளவும் தரமும்

வி. கே.



ஒலிம்பிக் விளையாட்டுக்கள் ஆரம்பமாக இருந்தது. எங்கே, எப்போது? பண்டையக் கிரேக்க நாட்டிலே, ஒலிம்பியாவிலே. பெரிய மைதானத்திலே தங்கத்தினாலான தீவட்டியை உயர்த்திப் பிடித்தபடி ஒரு கிரேக்க வீரன் ஓடிக் கொண்டிருந்தான். கிரேக்க நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வந்து குழுமியிருந்த விளையாட்டு வீரர்கள் அத்தனை பேரும் மூச்சை அடக்கிக் கொண்டு ஆவலோடு காத்திருந்தார்கள் — மைதானத்தின் கோடியிலே உள்ள ஒரு கொப்பரையிலே தீவட்டியோடு ஓடுபவன் போய் ஒலிம்பிக் விளையாட்டுக்களுக்கான அணையாத ஒளியை ஏற்றுவதைக் காண. அவர்கள் இன்னொன்றுக்காகவும் பயத்தோடு காத்திருந்தார்கள்.

விளையாட்டுக்கள் ஆரம்பமாவதற்கு முன் விளையாட்டு வீரர்கள் அனைவரும் ஒலிம்பிக் (கவுன்ஸில்) குழுவினரால் நன்னடத்தை பற்றி விசாரிக்கப்படுவார்கள். இளம் விளையாட்டு வீரர்கள், கடந்த நான்கு ஆண்டுகளில் அவர்கள் பயின்ற பள்ளியிலும், ஆடிய விளையாட்டுக்களிலும் நேர்மையுடன் நடந்து கொண்டார்களா என்பது பரிசீலிக்கப்படும். வீரர்களைக் கேள்விக் கணைகளால் துளைத்து விடுவார்கள் ஒலிம்பிக் குழுவினர். அது ஒரு பெரிய சோதனையான அம்சம். கண்டிப்பான இந்தப் பரீட்சையில் பங்குபெற, அலை அலையாக வந்திருந்த பையன்கள் அடுத்தடுத்து நகர்ந்து கொண்டிருந்தார்கள். அடுத்து டாமியன் என்ற பையனின் முறை. காரிந்த் என்ற நகரத்திலிருந்து ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொள்ள வந்திருந்தான். ஒலிம்பிக் விளையாட்டுக் குழு அதிகாரி நல்ல உயரம். கட்டுமஸ்தான உடல், தகதகக்கும் சிவப்பு ஆடை அணிந்து அமர்ந்திருந்தார். அந்தக் கம்பீரமான தோற்றமும், அவரது துளைக்கும் பார்வையும் விசாரணைக்காகக் காத்திருந்த இளைஞர்கள் பலரிடம் பயத்தை ஏற்படுத்தின. முக்கியமாக டாமியன் நடுங்கிப்போனான்.

''புகழ் பெற்ற காரிந்த் நகரத்திலிருந்து வந்தவன்தானே நீ?'' என்று கேள்வி பிறந்தது அதிகாரியிடமிருந்து.

''ஆமாம்'' என்று தலையாட்டினான் டாமியன்.

''நான் கேட்பதற்கு உண்மையான பதில் சொல்வாயல்லவா?''

''சொல்லுவேன்...''

''உன்னைப் பயிற்றுவித்தவர்களும், உன்னோடு பயின்றவர்களும் பாராட்டும்படியாக நடந்து கொண்டாயா?''

டாமியன் மறுபடியும் 'ஆம்' என்று தலையசைத்தான்.

''உரக்கச் சொல்லப்பா. ஒலிம்பியாவில் கூடியுள்ளவர்கள் எல்லோருக்கும் கேட்கும்படி உன் பதிலை வாய் விட்டுக் கூறு.''

டாமியன் ஆழ்ந்து சுவாசித்துவிட்டு நிமிர்ந்து நின்றபடி, ''எல்லோரும் பாராட்டும்படியாக நடந்து கொண்டேன்'' என்றான் உரத்த குரலில்.

அதிகாரி அருகிலுள்ள ஒலிம்பிக் அங்கத்தினருடன் ஏதோ தணிந்த குரலில் பேசினார். அவர் முகத்தில் கடுமை பரவியது. சட்டென்று டாமியன் பக்கம் திரும்பியவர், ''காரிந்தியின் அகாதெமியில் நீ பயின்று கொண்டிருக்கும் போது உன் வகுப்பில் ஒரு தடவை நீ உன் தோழனை ஏமாற்றியதுண்டல்லவா?'' என்று கேட்டார்.

டாமியனுக்குத் தொண்டை அடைத்தது. உடல் நடுங்கலாயிற்று. கூட்டத்தினரிடமிருந்து 'ஹ...ஹ...' என்ற ஒலி எழுந்தது. பந்தய மைதானம் முழுமையிலும் வேறு எவ்வித ஒலியும் கேட்கவில்லை. டாமியனின் படபடக்கும் இதயத் துடிப்பு மட்டுமே துல்லியமாகக் கேட்டது. தலைமையதிகாரி கடுத்த முகத்துடன் காரிந்திய இளைஞனைக் கடுமையாக நோக்கினார். வேதனை தரும் அதே வினாவை மறுபடியும் கேட்டார். டாமியனின் உடல் தள்ளாடியது. கால்கள் துவண்டன. ''ஆம், ஐயா! நீங்கள் கூறிய குற்

றத்தை நான் செய்திருக்கிறேன்'' என்று கூறியபோது டாமியனின் குரல் குழறியது.

ஒலிம்பிக் குழுவின் அங்கத்தினர்கள் தங்களுடைய கடுமையான முடிவை அறிவித்தார்கள். ''டாமியன், நன்னடத்தை விதிகளை மீறிய நீ, ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்குத் தகுதியற்றவனாகிவிட்டாய். இங்கிருந்து நீ வெளியேறிவிட வேண்டும்.''

நெற்றியில் முத்திட்டு நின்ற வியர்வைத் துளிகளைப் புறங்கையினால் துடைத்துக் கொண்டான். குனிந்த தலையுடன் மெதுவாகத் திரும்பி நடந்தான். ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. மைதானத்தில் கூடியிருந்த அத்தனை பேருடைய பார்வைகளும் அவன் உடலில் ஊசியாகக் குத்தின. அந்த மைதானம் முடிவற்று நீண்டு கொண்டேயிருப்பதாகத் தோன்றியது. நெடுந்தூரத்துக்குப் போனதும் அந்தப் புகழ் பெற்ற விளையாட்டு அரங்கையும் கம்பீரமாகச் சலவைக் கற்களால் எழுந்து நிற்கும் ஒலிம்பியாத் தேவதையின் கோயிலையும் திரும்பிப் பார்த்தான். அவன் இதயத்தை ஏக்கம் கவ்விக் கொண்டது, இனி அந்த அரங்குக்குள் நுழைய முடியாதே என்று.

வெகு நாழிகைக்குப் பிறகு விளையாட்டு வீரர்கள் போட்டிகளில் கலந்து கொள்ளுமுன் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ளும் அலங்கார அறையில் குழுமி இருந்தார்கள். அவர்கள் பேச்சும் மூச்சும் விளையாட்டு அரங்கிலிருந்து வெளியேற்றப்பட்ட டாமினியனைப் பற்றியேயிருந்தது. அவர்களில் ஒருவன் - காரிந்த் நகரத்தவர்களையே அவனுக்குப் பிடிக்காது — ஆர்ப்பாட்டமாக விமரிசித்துக் கொண்டிருந்தான்.

''அவனுக்கு ஏற்ற தண்டனைதான் அது. ஒலிம்பிக் விளையாட்டுக்களில் கலந்து கொள்வதற்கான விதிமுறைகளைப் பற்றித் தெரியுமல்லவா? ஆனால் அதை அவன் லட்சியம் செய்யவில்லை. காரிந்தில் அதிகமான வீரர்கள் கிடையாது. யாரோ ஒருவன் எப்போதோ வீரனாக வந்தாலும்'' என்று ஏளனமாகச் சிரித்தான். இவன் இப்படி காரிந்த் வீரர்களை உதாசீனப்படுத்திக் கொண்டிருந்தபோது ஒரு முதியவர் கவனித்துக் கொண்டிருந்தார். அவர் பார்வை அவனை உறுத்திற்று. ஆனால் அவன் தன் கேலிப் பேச்சை நிறுத்தவில்லை.

கிழவர் இளைஞர்களைத் தம் முழங்கையால் விலக்கிக் கொண்டு அவர்களிடையே புகுந்தார். ''உண்மைதான். நீ குறிப்பிடுவது காரிந்தின் சைமனைத்தான். ஆனால் அந்த விளையாட்டு வீரன் இரு முறைகள் ஒலிம்பியா வீரனாக வந்தவன். இது எனக்கு ஒரு சின்னக் கதையை நினைவுபடுத்துகிறது. அதை உங்களுக்குக் கூற ஆசைப்படுகிறேன்'' என்று அவர் கதை சொல்ல ஆரம்பித்து விட்டார்.

'' பிராணிகள் ராஜ்யத்தில் ஒவ்வொரு தாயும் மற்றவர்களை விடத் தானே உயர்ந்தவள் என்பதை நிலைநாட்ட அதிகமான (குட்டிகளை) குழந்தைகளைப் பெற்றுக் கொண்டன. எல்லா மிருகங்களும் ஒரு நாள், கம்பீரமான சிங்க ராணியைக் கர்வத்துடன் நோக்கின. ராணி தலை நிமிர்ந்து உட்கார்ந்திருந்தாள். மிருகங்கள் கேட்டன: ''நீ எத்தனை குழந்தைகளுக்குத் தாய்?''

''ஒரே ஒரு குழந்தைக்குத்தான். அதுவும் ஆண் சிங்கம்'' என்றது பெண் சிங்கமாகிய தாய்.


இதைக் கூறிவிட்டு அந்த முதியவர் திகைத்துப் போய் நிற்கும் அந்த இளைஞர்களிடத்திலிருந்து வெளியேறிக் கூட்டத்தோடு கலந்து விட்டார். இளைஞர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள் மௌனமாக. ''அளவு முக்கியமல்ல; தரம்தான் முக்கியம் என்பதை எத்தனை எளிமையாக உணர்த்திவிட்டார்'' என்று அவர்களுடைய உள்ளங்கள் வியந்து கொண்டிருந்தன.

''யார் அவர்!'' என்ற வினாவுக்கு ஒரு முதிய இளைஞன் விடையளித்தான்: ''அவரைத் தெரியாதா உங்களுக்கு ? அவர்தான் ஈசாப்!''



இதோ வந்து விட்டது ஸ்காலர்!

மாணவமணிகளுக்கு பிளாக்பர்டு அளித்திடும் மணியான பேனா



பிளாக்பர்டு இப்போது
மாணவமணிகளுக்காக-
வே ஸ்காலர் பேனாவை
உருவாக்கியுள்ளது.
கல்விப் பிடிக்க
கவர்ச்சியான
அழகிய உடல்;
தடையின்றி மை
பாய சிறப்பான
இரிடியம்-டிப்டு
நிப்பு. இன்றே கண்டு,
எழுதிப் பாருங்கள்.
முழுப் பாராட்டுதலுக்
குரிய பேனா என்பதை
நீங்களே
உணருவீர்கள்

ஸ்காலர் பேனா
உலகுபுகழ் பிளாக்பர்டு
குடும்பம் தரும்
இன்னொரு தரமான பேனா

heros'-SI-132B-TAM

பிரில்® இங்க்

உங்கள் எழுத்துக்கு
அழகு ஊட்டுகிறது.

IS:1221 ISI



தயாரிப்பாளர்.
இண்டஸ்டிரியல் ரிஸர்ச் கார்ப்போரேஷன்
சென்னை-41 & பெங்களூர்-3

ADWAVE-IRC-151 TAM

மூளைக்கு வேலை

—சுஜாதா

● உங்கள் நண்பரிடம் 12345679 என வரிசையாக எழுதச் சொல்லுங்கள். (இவ்வரிசையில் 8ஆம் இலக்கம் இல்லை என்பதைக் கவனித்துக் கொள்க)

இந்த எண்களில் உங்கள் நண்பருக்குப் பிடித்தமான அதிர்ஷ்ட எண் எது எனக் கேளுங்கள். அவர் எந்த எண்ணைச் சொல்கிறாரோ அதற்கு மேலே × எனக் குறியிடச் சொல்லுங்கள். பிறகு நீங்கள் ஏற்கனவே தந்த 12345679ஐ நீங்கள் குறிப்பிடும் ஓர் எண்ணால் (அது எது?) பெருக்கச் சொல்லுங்கள்.

அப்படிப் பெருக்கிய விடையாக வருவது அனைத்தும் உங்கள் நண்பரின் அதிர்ஷ்ட எண்ணாகவே மாறிவிடும். அதிசயத்தைக் காட்டுங்கள்.

உதாரணம்:

```
 12345679
       45   (பெருக்கத்தந்த எண்)
---------
 61,728,395
493,827,16
---------
555,555,555
```

ஒரு ரகசியம்: உங்கள் நண்பர் எந்த எண்ணைக் குறிப்பிட்டாலும் சரி, அதை 9ஆல் பெருக்கி அந்தத் தொகையைக் கொண்டு 12345679ஐப் பெருக்கச் சொல்லுங்கள் (5—9—45)



● சுப்புவின் வயதில் 1/6 பங்கு பிள்ளைப் பிராயத்தில் கழிந்து விட்டது. 1/12 பங்கு இளமைப் பருவத்திலும், 1/7 பங்கு பிரம்மச்சரியத்திலும் போக, பின்னர் அவன் கல்யாணம் செய்து கொண்டான். திருமணம் ஆகி 5-ஆம் வருடத்தில் ஒரு மகனைப் பெற்றான். சுப்பு காலமாவதற்கு நான்கு வருடங்களுக்கு முன்பே அவன் மகன் காலமாகி விட்டான். அதாவது சுப்பு எந்த வயதில் இறந்தானோ, அதில் சரி பாதி வயதடையும்போதே மகன் காலமாகி விட்டான். அப்படியானால் சுப்பு எந்த வயதில் காலமானான்?

விடை:
சுப்பு 84ம் வயதில் காலமானான். சுப்புவின் மகன் 42ம் வயதில் காலமானான். அப்போது சுப்புவின் வயது 80. சுப்புவின் வாழ்க்கை விவரம்: பிள்ளைப் பிராயத்தில் 14 வருடம்; இளமையில் 7 வருடம்; பிரம்மச்சரியத்தில் 12 வருடம். 33 ஆம் வயதில் கல்யாணம் செய்து கொண்டான்; 38ம் வயதில் மகன் பிறந்தான்.

● கமலாவுக்கு இப்பொழுது வயது 24. விமலாவுக்கு இப்பொழுது என்ன வயதாகிறதோ அதே வயதில் கமலா இருந்தபொழுது விமலாவைவிட இருமடங்கு வயதுடையவளாக இருந்தாள் கமலா. அப்படியானால் விமலாவின் இப்போதைய வயதென்ன?

விடை:
விமலாவின் வயது 18. கமலா 18ம் வயதில் இருந்தபோது (6 வருடங்களுக்கு முன்பு) விமலாவுக்கு 12 வயது. அதாவது கமலாவின் இப்போதைய வயதில் (24) சரி பாதி வயது அது!

● பின்வரும் கூட்டல் கணக்கில் எண்களுக்குப் பதிலாக எழுத்துக்களே உள்ளன. விடைமட்டும் எண்களாகவே தரப்பட்டுள்ளது. விடையைக்கொண்டு எழுத்துக்களுக்கு உரிய எண்களைச் சுலபமாகக் கண்டுபிடித்து விடுவீர்கள். ஆனால் எவ்வளவு சீக்கிரத்தில் முடியும் என்பதே கேள்வி!

```
 ABCDE
 ABCDE
 ABCDE
------
222477
```

விடை: கூட்டப்படவேண்டிய மூன்று வரிசைகளிலும் ஒரேமாதிரி எழுத்துக்களே இருப்பதால், எண்களும் ஒரேமாதிரியாகத்தான் இருக்க வேண்டும். எனவே மொத்தத்தை 3ஆல் வகுத்தால் ஒவ்வொரு வரிசைக்கும் உரிய விடை தெரியும். அப்போது A-7, B-4, C-1, D-5, E-9 என அறியலாம்.

உலகின் மிகச் சிறிய நாடு

நாடு என்பது என்ன? சுதந்திரமான ஆட்சியும், தனி அரசாங்கமும் நிச்சயமான எல்லைகளையும் கொண்ட ஒரு நிலப் பரப்பை நாடு என்கிறோம். உலகின் மிகச் சிறிய சுதந்திர நாடு வாடிகன் நகரம். இத்தாலியில் உள்ள ரோம் நகரின் நடு மையத்தில் இந்த நகரம் இருக்கிறது. இதன் மொத்தப் பரப்பளவு 0.17 சதுர மைல்கள்தான்! கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களின் அரசாட்சி நடக்கிறது இங்கு. இந்நகரத்தின் தலைவர் போப் ஒரு கவர்னரின் மூலம் இந்நகரை ஆட்சி நடத்துகிறார். வாடிகன் நகரத்துக்குத் தனிக் கொடி, தனித் தபால் இலாகா, ரயில்வே ஸ்டேஷன், நாணயம் எல்லாமே தனி. டெலிபோன் அமைப்பு, ஒலிபரப்பு நிலையம் ஆகியவையும் கூடத் தனித்தியங்கக் கூடியவை. உலகிலுள்ள கதோலிக்கர்கள் வாரி வழங்கும் நன்கொடைகள் மூலம் இந்நகரின் ஆட்சி நடைபெறுகிறது.

வாடிகன் நகருக்குள் வாடிகன் அரண்மனை (இது போப்பின் இருப்பிடமாகும்) பூந்தோட்டங்கள், மிகப் பெரிய ஸெயின்ட் பீட்டர் பாஸிலிக்கா என்ற மாதாகோவில் எல்லாமே அடங்கியுள்ளன. அரண்மனைக்குள் நுண்பொருள் கலைக் கண்காட்சியும், வாசகசாலையும் உள்ளன. உலகின் மிகப் பெரிய வாசகசாலைகளில் வாடிகன் லைப்ரரியும் ஒன்று.

பிளாஸ்டிக்

வார்ப்பு எடுக்கவும் மாதிரிகளை அமைக்கவும் ஏற்ற வகையில் இணக்கமாக வரும் ஒரு பொருளுக்கு பிளாஸ்டிக் என்று பெயர்.

விஞ்ஞானிகள் பிளாஸ்டிக்கைத் தயாரிக்க அணுக்களி (மொலுகியூல்)லிருந்து ஆரம்பிக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட பொருளின் அணுக்களை உற்பத்தி செய்ய அதைச் சங்கிலித் தொடர்போல் ஆக்கி . அவைகளை இணைக்கிறார்கள். இந்த நீண்ட சங்கிலி அணுக்கள் தனி அணுக்களிலிருந்து மாறுபட்ட வகையில் செயல்படுகின்றன. இவை சங்கிலி போலாகும்போது இந்த அணுக்களுக்கு பாலிமரைஸ் (Polymerize) என்று பெயர். இப்படி இந்த அணுக்களை பாலிமரைசேஷன் (Polimerization) செய்யப்படும்போது புதிய பொருள்கள் உருவாக்கப்படுகின்றன.

கெட்டியான பாலிமர் (Polymer) துண்டுகளை அரைத்துப் பட்டுப்போன்ற பொடியாக்குகிறார்கள். அல்லது சிறுசிறு மணிகளாக்குகிறார்கள். வர்ணங்கள் சேர்க்கப்படுகின்றன. இதை வளைக்கக் கூடியதாக்குவதற்கு ரஸாயனங்களும் கலக்கப்படுகின்றன.

125 ஆண்டுகளுக்கு முன்னாலேயே விஞ்ஞானிகளுக்குப் பிளாஸ்டிக் பற்றித்

உடலும் உணவும்

நாம் சாப்பிடும் உணவுப் பொருள் உடலுக்குள் போனதும் என்ன ஆகிறது என்று கேட்டால் 'ஜீரணிக்கப்படுகிறது' என்று சொல்லுவீர்கள். ஜீரணிக்கப் படுதல் என்றால் என்ன?

நாம் சாப்பிடும் ஆகாரத்தில் இரு முக்கியமான காரியங்களை ஜீரண உறுப்புக்கள் செய்கின்றன. முதல் காரியம் உணவுப் பொருளைப் பெரிய அணுக்களாக (மொலுகியூல்ஸ்) உடைக்கிறது. அப்போதுதான் அவைகளை உடலின் பல பாகங்களுக்கும் கொண்டு செல்ல முடியும். பெரிய உணவு அணுக்களை உடலிலுள்ள ஸெல்களின் சுவர் வழியாகவும் திசுக்களின் வழியாகவும் கொண்டு செல்ல முடியாது. ஆகவே மாவுப் பண்டம் சர்க்கரைப் பொருளாகவும், எண்ணெய்ப் பண்டம் சோப்பாகவும், புரோட்டீன்கள் அமினோ அமிலங்களாகவும் மாற்றப்படுகின்றன.

ஜீரணித்தலின் அடுத்த காரியம் அந்நிய உணவு அணுக்களை மனித அணுக்களாக மாற்றும் காரியம். நாம் பல்வேறு விதமான உணவு அணுக்களை உட்கொள்ளுகிறோம் என்பதை மறந்துவிடக்கூடாது. பால், இறைச்சி, காப்பி, உருளைக் கிழங்கு, மீன் இப்படிப் பலப்பல. மனித உடல், புரோட்டீன் மாலுக்யூல்களால் (அணுக்களால்) ஆக்கப்பட்டிருக்கிறது. அதுவும் ஒரு விசேஷ

ஜெல்லி மீன்

கடல்வாழ் ஜீவராசிகளில் மிகவும் விநோதமானது ஜெல்லி மீன் என்னும் பச்சடி மீன். ஜெல்லி என்ற சாப்பிடும் பண்டத்தைப் பார்த்திருப்பீர்களே. அதே மாதிரி கொழ கொழவென்றிருக்கும் இந்த மீன். பார்வைக்கு மீனின் தோற்றம் கிடையாது. மீன் இனத்தையும் சேர்ந்ததல்ல இது. இவை தங்களைக் காத்துக் கொள்ளக் கொட்டும் குணமுடையவை. இதன் கடி சில சமயங்களில் ரொம்ப அபாயமானதும் கூட.

கிண்ணத்தைக் கவிழ்த்தது போன்ற தோற்றம் கொண்டவை பச்சடி மீன்கள். இதன் நடு மையத்திலிருந்து தொங்கும் ஒருவித அமைப்பே இம் மீனின் ஜீரண உறுப்பாகும். இக்குழாய்களின் மறுகோடி வாயாகப் பயன்படுகிறது. கிண்ண அமைப்பின் ஓரங்களில் கயிறு போன்ற குழாய்கள் பல உண்டு. இவை ஆகாரங்களைத் தேடவும், சமயங்களில் நீந்தவும் பயன்படுகின்றன. டெண்டகிள் என்ற ஸ்பரிசக் குழல்களுக்கிடையே நரம்பு மண்டலமும் உணர்ச்சி உறுப்புக்களும் இருக்கின்றன. கிண்ணம் போன்ற பச்சடி மீன், மெல்லிய ஜவ்வு போன்ற இரு அமைப்புக்களுக்கிடையே பச்சடி (ஜெல்லி) போன்ற உறுப்பைக் கொண்டிருக்கிறது. பச்சடி மீனை நீரிலிருந்து

மற்றத் தேசங்களோடு வாடிகன் நகருக்கு ராஜரீகத் தொடர்புகள் உண்டு. பல நாடுகளின் பிரதிநிதிகள் வாடிகன் நகரில் உள்ளனர். மத்திய இத்தாலியில் பல ஆண்டுகள் வரை பெரும் நிலப் பரப்பு போப்பாண்டவரின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. 1859ல் இந்தப் பகுதி பாபால் ஸ்டேட்ஸ் என்று அழைக்கப்பட்டன. அப்போது அதன் விஸ்தீரணம் 16000 சதுர மைல்கள். 1870ல் தேசிய இத்தாலியின் தலைநகரமாக ரோம் ஆனபோது பாபால் ஸ்டேட்ஸ் இத்தாலி நாட்டின் ஒரு பகுதியாகியது. இதைப் போப்பாண்டவர் கடுமையாக எதிர்த்து வந்தார். 1929ல் இத்தாலி நாட்டு அரசாங்கத்துக்கும் போப்பாண்டவருக்குமிடையே ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன் படி வாடிகன் நகரம் தனி நாடாக ஏற்கப் பட்டது.



... தெரிந்துக்கோ ...

தெரியும். ஆனால் அப்போதெல்லாம் இந்தச் செயற்கைப் பொருளுக்கு அத்தனை தேவை இருக்கவில்லை. இயற்கைப் பொருள்களான மரம், உலோகம், ரப்பர், தோல், தந்தம் ஆகியவை ஏராளமாகக் கிடைத்தன. முதல் முதலில் தந்தத்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டபோது தந்தத்தைப் போலவே ஒரு மாற்றுப்பொருள் கண்டுபிடிப்பவர்களுக்குப் பரிசு தருவதாக அறிவித்தார்கள். ஜான் ஹியாட்டும் அவர் சகோதரர் இஸையா ஹியாட்டும் இதற்காக ஆராய்ச்சி மேற்கொண்ட போது கண்டுபிடிக்கப்பட்டது தான் ஸெலுலாய்டு. இதை இவர்கள் 1870ல் பேடண்டு பதிவு செய்துகொண்டார்கள்.

ஸெலுலாய்டில் பல குறைபாடுகள் இருந்தன. ஆனால் அதன் தோற்றம் மற்ற விஞ்ஞானிகளைச் செயற்கைப் பொருள்களை உருவாக்குவதில் ஊக்கம் கொள்ளச் செய்தது. 1907ல் லியோ பேக்லாண்டு என்பவர் ஃபெனோலிக் பிளாஸ்டிக்கைக் கண்டுபிடித்தார். முதல் முதலில் மிகப் பெரிய அளவில் கண்டுபிடிக்கப்பட்ட பூரணமான செயற்கைப் பொருள் அதுதான். அதன் பிறகு பல புதிய பிளாஸ்டிக் கலவைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.


... தெரிந்துக்கோ ...

அமைப்பின்படி ஆக்கப்பட்டிருக்கிறது. ஆகவே வெண்ணெய், மாவு, மீன், பழங்கள் ஆகியவைகளை அதனதன் அணுக்களாக மாற்றப்பட வேண்டும். இதிலிருந்து மனித புரோட்டீன், கொழுப்பு, மாவுச் சத்து இவை உற்பத்தியாக்கப்படுகின்றன.

ஜீரணித்தல் என்பது சிக்கல் நிறைந்த ஒரு நிகழ்ச்சி. வாயில் உமிழ்நீருடன் ஆரம்பிக்கிறது. இங்கு மாவுப் பண்டங்கள் உடைக்கப்படுகின்றன. இரைப்பையிலும் இதே காரியம் தொடருகிறது. இங்கு ஜீரணித்தலின் பெரும் பாகம் நிறைவேறுகிறது. இரைப்பையின் சுவர்களிலிருந்து சுரக்கும் திரவங்கள் உணவோடு கலக்கின்றன. உணவு இப்போது திரவ நிலையில் இருக்கும். இது சிறு குடல் வழியே செல்லும்போது, புரோட்டீன்களும் கொழுப்புச் சத்தும், மாவுப் பண்டங்களும் மிக மிக நுண்ணிய அணுக்களாக உடைபடுவதும் உடலால் ஏற்றுக் கொள்ளப்படுவதும் இந்தப் பகுதியில் நிறைவு பெறுகிறது. சிறு குடலின் வழியாக ஜீரணிக்கப்பட்ட நிலைக்கு மாற்றப்பட்ட பொருள் செல்லும்போது அவைகளை இரத்தத்தினாலும் நிண நீராலும் கிரகித்துக் கொள்ளப்படுகிறது. இவ்வகையில் ஊட்டச் சத்து உடலின் எல்லாப் பாகங்களையும் அடைகிறது.

... தெரிந்துக்கோ ...

வெளியில் எடுத்துப்போட்டால் வெகுவிரைவில் அது காய்ந்து போகும். அதன் உடலில் 98 சத விகிதம் தண்ணீர். சிறிய ஜெல்லி மீன் கொட்டினால் ஆபத்தில்லை. ஆனால் பெரிய ஜெல்லி மீன் கொட்டினால் அந்தக் கதையே வேறுதான். பன்னிரண்டு அடி விட்டமும் நூறு அடிகளுக்கும் மேலான ஸ்பரிசக் குழல்களும் கொண்ட பச்சடி மீன்கள் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். இத்தகைய ராட்சஸ ஜெல்லி மீன் உங்களைச் சுற்றிக் கொண்டால் உங்களால் மூச்சு விட முடியாது. அநேகமாகச் செயலற்றவராக ஆக்கிவிடும். போர்ச்சுகீஸ் போர் வீர ஜெல்லி மீன் என்று ஒரு வகை. இது மாக்கரில் என்ற வகை மீனைக் கொன்று அப்படியே முழுசாகச் சாப்பிடுமாம்! மனிதர்களுக்கு மரண காயத்தை உண்டாக்க வல்லது. ஆஸ்திரேலியாவின் கடற்கரை ஓரங்களில் 'கடல்குளவி' என்ற வகைப் பச்சடி மீன்களின் கொட்டு மரணத்தையே ஏற்படுத்துமாம். இவற்றின் ஸ்பரிசக் குழல்கள் இரையின் உடலில் துளையிட்டு விஷத்தைச் செலுத்தும் வல்லமை பெற்றவை.



தெரிந்துக்கோ.....

வாழ்க்கை வரலாறு

நீராவிக்குக் கடிவாளமிட்டவர்

-விகேயெம்



“ஈரத் தரையிலிருந்து உடனே எழுந்திரு ஜாமி, இல்லாவிட்டால் மறுபடியும் ராத்திரி யெல்லாம் இருமிக் குலைப்பாய். குளிர்ந்த காற்று வேறே வீசுகிறது. உன் கோமாளித்தனமான படங்களை யெல்லாம் சிலேட்டில் போடு போதும். சமையலறைத் தரையில் உட்கார்ந்து கொண்டு இப்படிக் கிறுக்காதே'' என்றாள் அந்தத் தாய். தன் மகன் சதா நோயாளியாக இருப்பதில் அவளுக்கு வருத்தமும் வேதனையும். மாரிக் காலத்தில் பள்ளிக்குப் போக மாட்டான். ஏதாவது உடம்பைப் படுத்தும். வீட்டிலேயே இருக்கும் மகனைச் சமாளிப்பது பெரும் பாடு தாய்க்கு.

அவள் வாழ்ந்தது ஸ்காட்லாந்தில். ஆங்கிலேயர்கள் அடிக்கடி ஆக்கிரமிப்புச் செய்ததினால் நாட்டின் பொருளாதார நிலை ரொம்ப மோசமாக இருந்தது. பண்டங்கள் விலை ஏறிக் கிடந்தன. முக்கியமாகக் குழந்தை ஆசைப்படி படம் போடக் காகிதம் வாங்கித் தரக்கூட முடியவில்லை. அதனால்தான் அவன் தரையெல்லாம் சித்திரம் வரைந்தான். அந்தப் பையன் வரைந்தவை அவன் அப்பாவும் அம்மாவும் நினைத்ததைப் போல வெறும் குழந்தைத்தனமான படங்களல்ல. எல்லாம் கணித சம்பந்தமான வரை படங்கள், வட்டம், முக்கோணம், சதுரம் இவைகளைக் கொண்டவை.

இந்தப் பையனின் பெயர் **ஜேம்ஸ் வாட்**. ஸ்காட்லாந்தில் எளிய குடும்பத்தில் பிறந்த இவன் நீராவிக்குக் கடிவாளமிட்டு, மனித குலத்துக்கு மகத்தான சக்தியாக்கிக் கொடுத்தான்.

இன்று கோலாகலமும், இரைச்சலும் சந்தடியுமாகக் காணப்படும் இங்கிலாந்து நாடு இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் எப்படி இருந்தது? எங்கும் ஓரே அமைதி, நிசப்தம். யந்திரங்களின் ஒலியே கிடையாது. குதிரைகள் சாலைகளில் வண்டிகளை இழுத்துச் செல்லும் போது அவற்றின் குளம்பொலியும், புழுதி மூடிய வீதிகளில் ,வண்டிச் சக்கரங்கள் ஏற்படுத்திய சப்தமும்தான். கிராமப் புறங்களில் ஓடைகளில் நீர் இறைக்கும் சக்கரங்களின் கிறீச்சொலியைக் கேட்கலாம். இவை தவிர எங்கும் வெறுமை தான். கண்ணுக்கு எட்டிய தூரம் வரை வயல் வெளிகளும், காடுகளும். ஆங்காங்கே ஒருசில தொழிற்சாலைகள் இருந்தன. கைத்தொழில் கலை வல்லவர்கள் இருந்தார்கள். கருமான், தச்சர், நெசவாளர் இவர்களெல்லாம் தொழில் செய்யவில்லையா? செய்தார்கள். உடல் உழைப்பினால் பொருள்களை உற்பத்தி செய்தார்கள். புல்லி, லீவர் ஆகியவற்றால் இயங்கக்கூடிய ஒருசில இயந்திரங்களும் இருந்தன. இந்த இயந்திரங்களை இயக்க மனித சக்தி இல்லாமல் புதிய ஒரு சக்தியைக் கண்டுபிடித்தாக வேண்டும் என்ற ஒரு தவிப்பு ஏற்பட்டது. காற்று, நீர், விலங்குகள் ஆகியவற்றின் சக்திகளைப் பயன்படுத்தி வந்தனர். ஆனால், இவைகளுக்கும் மேலாக ஒரு சக்தி தேவை என்று கருதினான் மனிதன்.

நீராவி என்று ஒரு சக்தியைக் கண்டார் நியூ கோமன் என்பவர். ஆனால் இவர் இதற்குத் தீ இயந்திரம் என்று தான் பெயர் கொடுத்தார். உண்மையில் இன்றைய நீராவி யந்திரத்தின் முழுமையான காரியத்தை அது செய்யவில்லைதான். ஆனால் நீராவியின் சக்தியைப் பயன்படுத்தி மகத்தான புரட்சிகளைச் செய்யலாம் என்பதற்கு வழி காட்டியது நியூ கோமனின் யந்திரம் தான். நியூ கோமனின் யந்திரத்தில் பல முன்னேற்றங்களைச் செய்து நீராவியின் சக்தியைப் பயன்பபடுத்திப் பலன் காணும் யந்திரத்தை உருவாக்க வந்தார் ஜேம்ஸ் வாட். இனி ஜாமி, நியூ கோமனின் யந்திரத்தை எப்படி மாற்றினார் என்பதைப் பார்ப்போம்.

ஜாமி என்ற ஜேம்ஸ் வாட் உடல் நலமாக இருக்கும்போது பள்ளிக்குச் சென்று பயிலும் நாட்களில் அவரது ஈடுபாடு ஜ்யாமிதியில் அதிகமாக இருந்தது. அம்மாவினுடைய அடுப்பங்கரைத் தரையில் சாக்பீசினால் கணித வரைபடங்

களை வரைந்த பையனை ஜாமி, புகழ்பெற்ற பொறியியல் கலைஞர்களில் ஒருவராக, என்றும் எல்லாராலும் நினைக்கும்படியான நிலையான புகழைப் பெற்றார்.


1755ல் ஈரக் காற்று நிறைந்த தன் தாயகத்திலிருந்து லண்டனுக்கு வந்தார் வாட். விஞ்ஞானக் கருவிகள் செய்யும் ஒருவரிடம் வேலைக்கு அமர்ந்தார். கப்பல் கட்டும் தொழிலுக்குத் தேவையான செக்ஸ்டண்டுகள், காம்பஸ்கள் ஆகியவற்றையும் மற்றும் ஜ்யாமிதிக்கான கருவிகளையும் தயாரிப்பவர் இவர். சில வருஷங்களில் இத் தயாரிப்பு முறைகளில் தேர்ச்சி பெற்றுத் திறமையடைந்த வாட் ஸ்காட்லாந்துக்குத் திரும்பிச் சொந்தமாகவே கிளாஸ்கோவில் இம்மாதிரியான கருவிகளைத் தயாரிக்கும் கடையைத் திறந்தார்.



கிளாஸ்கோ சர்வ கலாசாலையினர், இப்படி ஒரு திறமைசாலி தம் ஊருக்கு வந்திருப்பதை அறிந்தால் சும்மா விடுவார்களா? சர்வ கலாசாலையின் அங்கீகாரம் பெற்ற கருவிகள் செய்யும் கலைஞராக வாட்டை நியமித்து விட்டார்கள். ஒரு நாள் சர்வ கலாசாலையில் பழுதுபட்டிருந்த நியூ கோமனின் நீர் இறைக்கும் இயந்திரத்தைச் சரிசெய்து தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார் வாட். நியூ கோமனின் மாதிரி யந்திரம் அது. சில மாணவர்கள் அதில் விளையாடப் போக அது பழுதடைந்து கிடந்தது. முன்பே கூறியது போல நியூ கோமனின் யந்திரத்தை இயக்கியது உஷ்ணம்தான். நீராவியல்ல. அதில் சக்கரங்கள் ஏதும் கிடையாது.

எரிபொருள் எவ்வளவு வீணாகிறது என்பதைக் கண்டார் ஜேம்ஸ் வாட். சிக்கனத்துக்குப் பெயர் பெற்ற ஸ்காட்லாந்துக்காரரான வாட் அப்போதைக்கு அந்த யந்திரத்தை அவர்களுக்குச் சரி செய்து கொடுத்தாலும் எரி சக்தியை வீணாக்காமல் பயன்படுத்தி அந்த யந்திரத்தை மாற்றியமைக்க வேண்டும் என்று உறுதி கொண்டார். எரி சக்தி வீணாவதைத் தடுத்ததோடு மட்டுமல்லாமல் நீராவியின் சக்தியினாலேயே பிஸ்டனை மேலும் கீழும் இயக்க வைத்துப் பூரணமான ஒரு நீராவி யந்திரத்தை உருவாக்கி விட்டார் வாட்.

டாக்டர் **ஜான் ரோபக்** (John Roebuck) என்பவர் பல நிலக்கரிச் சுரங்கங்களுக்கு உரிமையாளர். அதில் திடீர் திடீரென்று நீர் பெருகிச் சுரங்கத் தொழிலாளர்களின் உயிருக்கு அபாயத்தை அளித்து வந்தது. கவலையோடிருந்த ரோபக் இளைஞர் ஜேம்ஸ் வாட்டின் புதிய கண்டுபிடிப்பைப் பற்றிக் கேள்விப்பட்டு அவரைப் போய்ப் பார்த்தார். ஸ்காட்லாந்து வாலிபரின் புதிய யந்திரம் அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. அதன் உற்பத்திக்குப் பொருளுதவி செய்ய முன்வந்தார். ரோபக்கின் பிரும்மாண்டமான அரண்மனையின் அவுட் ஹவுஸில் ஜேம்ஸ் வாட் தமது வேலையைத் தொடங்கினார்.



வாட்டின் வாழ்நாளில் இது ஓர் இருள் நிறைந்த பகுதி. அடிக்கடி நோய்வாய்ப்பட்டார். வேலையில் முழு மூச்சாக ஈடுபட முடியவில்லை. எதிர் பார்த்த முன்னேற்றம் இல்லை. ரோபக்கின் செல்வமும் கொஞ்சம் கொஞ்சமாகக் கரையலாயிற்று. ஒரு நிலையில் அவர் வாட்டுக்கு உதவுவதும் நின்றது. அவர் முதலீடும் வாட்டின் கண்டு பிடிப்பும் பர்மிங்ஹாமில் உள்ள ஸோஹோ என்னும் இடத்திலிருந்த **மாத்யூ பௌல்டன்** என்பவருக்கு உரிமையாயின. இவர் உலோகச் சாமான்களைத் தயாரிப்பவர்.

வாட்டின் வாழ்வில் இது ஒரு திருப்பு முனை. பௌல்டன், வாட்டுக்கு உற்சாக மூட்டினார். ஸ்காட்லாந்து இளைஞனான வாட் நீராவி என்ற மாபெரும் சக்திக்குக் கடிவாளமிட்டு அதனால் பெரும் பெரும் யந்திரங்களை ஓட்ட முடியும் என்று நம்புவதை அவரும் நம்பினார். மனித சக்தி இல்லாமல் தானாக இயங்கும் ஒரு யந்திரம் முதல் முதலில் உருவாக்கப்பட்டது. பௌல்டனிடம் மிகப் பெரிய தொழிற்சாலை இருந்தது. வாட் விரும்பும் எதையும் அங்கு உருவாக்கிக் கொள்ளலாம் என்றார் பௌல்டன்.

முதல் யந்திரத்தில் பம்புகள் அபிவிருத்தி செய்யப்பட்டன. சக்கரம் பொருத்தப்பட்ட ஓர் அமைப்பு பிஸ்டனை மேலும் கீழும் இயக்கும் (ரோடரி) முறையை 1781ல் பேடண்ட் பதிவு செய்து கொண்டார் ஜேம்ஸ்.

தொழிற்சாலையில் உள்ள ஓட்டை வாய்த் தொழிலாளர்கள் ஜேம்ஸ் வாட்டின் புதிய யந்திர ஓட்டங்களைப் பற்றி வெளியே வம்பளக்கவே வேறு பலர் அதே போன்று யந்திரங்களை உருவாக்கினார்கள். இதனால் யந்திரத்துக்கான உரிமைப் பிரச்னை எழுந்தது. நீதிமன்றம்வரை போகும்படியாயிற்று. நாணயமற்ற இச்செயல்களின் மீது தன் வெறுப்பைக் காட்ட வாட் தம் தொழிற்சாலைக்குள் முடங்கி, தம்முடைய யந்திரத்தின் மூலம் ரோடரி இயக்கத்தைப் பெற மாறுபட்ட ஐந்து வழிகளைக் கண்டு பிடித்தார். இதனால் முடிவில் பொருளும் புகழும் ஜேம்ஸ் வாட்டை வந்தடைந்தன. வாட்டின் புதிய இயந்திரம் மனித இனத்துக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகக் கருதப்பட்டது. ஏராளமான நெசவாலைகளில் இவருடைய யந்திரங்கள் பொருத்தப்பட்டன. நீர் நிறைந்து செயல்படாமலிருந்த நூற்றுக் கணக்கான சுரங்கங்களிலிருந்து தண்ணீர் வெளியேற்றப்பட்டு வேலை செய்யலாயின.

1819ம் ஆண்டு ஜேம்ஸ் வாட் காலமானார், தமது எண்பத்து மூன்றாவது வயதில். அதற்குள் படகுகள் நதிகளில் தமது இயந்திரத்தினால் செலுத்தப்படுவதையும் நீராவி லோகோமோடிவ்கள் சுரங்கங்களிலிருந்து வாகன்களை இழுத்துச் செல்வதையும் கண்டு விட்டார். பிற்காலத்தில் ரயில்வேக்களின் முன்னேற்றத்துக்கும் பல பெரிய யந்திரங்களை இயக்கவும் நீராவியின் சக்தியைப் பயன்படுத்தினார்கள். அதற்கெல்லாம் காரணமாக இருந்தது ஜேம்ஸ் வாட்டின் நீராவி யந்திரம்தான்.

வாட் ஒரு விநோதமான பிறவி. எத்தனையோ புகழும் பொருளும் வந்து குவிந்தபோது கூட அவர் மகிழ்ந்து போய்விடவில்லை. 'எனக்கு இன்பந் தருபவை தூங்குவதும் வேலை செய்யாதிருப்பதும்தான்' என்பார் தம் நண்பர்களிடம். ஆனால் இவர் இப்படி எப்போதும் இருந்ததே இல்லை.

குதிரைச் சக்தி (ஹார்ஸ் பவர்)என்று கணக்கிடும் முறையை உருவாக்கியவர் ஜேம்ஸ் வாட்தான். ஸ்காட்லாந்துக்காரரான இவருக்கு எத்தனையோ நினைவுச் சின்னங்கள் இருக்கலாம். ஆனால் ஒரே ஒரு நினைவுச் சின்னம் மட்டும் மிகவும் சிறப்பானது. ஒவ்வொரு மின் விளக்குகளிலும் இவருடைய பெயரோ அல்லது பெயரின் முதல் எழுத்தோ இடம் பெற்றிருக்கும். நாற்பது வாட், எண்பது வாட் பவர் என்கிறீர்களே, அந்த 'வாட்' என்பது மின்சாரத்தைக் கணக்கிடும் ஓர் அளவு. ஜேம்ஸ் வாட்டைக் கௌரவிப்பதற்காக அவர் நினைவாக அவரது பெயரையே இந்த அளவுக்கு வைத்து விட்டார்கள். ஜேம்ஸ்வாட் நீராவியின் சக்திக்குக் கடிவாளமிட்டு மனிதனின் கையில் கொடுத்தவர் மட்டுமல்ல; எந்த யந்திரமானாலும் அது செய்யும் வேலையைக் குதிரைச் சக்திக்குக் கணக்கிட்டு அறியும் முறையை வகுத்துக் கொடுத்தவரும் கூட. ஹார்ஸ் பவர் — குதிரைச் சக்தி என்றால் என்ன? ஒரு பலம் கொண்ட குதிரை ஒரு சராசரி வேலையைச் செய்வதானது 33,000 பவுண்டுள்ள நிறையை ஓர் அடி உயரத்துக்கு ஒரு நிமிஷத்தில் தூக்குவதற்குச் சமம். இதுவே ஒரு குதிரைச் சக்தி எனப்படும். ஒரு நீராவி யந்திரத்தின் சக்தியைக் கணக்கிட இந்த முறையையே வாட் கையாண்டார்.

நோஞ்சானாகப் பிறந்த ஒரு குழந்தை உலகத்துக்கு எத்தகைய சக்தியை உருவாக்கிக் கொடுத்தது பார்த்தீர்களா?

மணப் பெண்

இடி இடிக்கிறதல்லவா? அதற்கு உரிய கடவுளின் பெயர் தார் (Thor) மிகவும் பலம் பொருந்திய கடவுள் இவர். சிவப்புத் தாடியோடு கூடியவர். கிரேக்க, ரோமானியர்களைப் போல் ஐரோப்பாவின் வடக்குப் பகுதியில் வாழ்ந்த நார்ஸ் இன மக்களின் இடிக் கடவுள் இவர். இவரிடம் மூன்று அற்புதமான பொருள்கள் இருந்தன. ஒன்று மந்திர இடைக் கச்சை (பெல்ட்) மெகினியார்டு என்று பெயர் இதற்கு. தாரின் பலத்தை இரு மடங்காக்கும் வல்லமை பெற்றது இது. இரண்டாவது மகத்தான சம்மட்டி மியால்னிர் என்று பெயர். இதை வீசினால் இலக்கைத் தாக்கிவிட்டு எறிந்தவரிடமே திரும்பி வரும் ஆற்றல் படைத்தது. மூன்றாவது இரும்புக் கையுறை—லார்ன் கிரிப்பர். இதை அணிந்து கொண்டால் தான் அந்த இரும்புச் சம்மட்டியை உறுதியாகப் பற்றிக்கொள்ள இயலும்.

ராட்சதர்கள் அங்கும் உண்டு. எதற்கும் அஞ்சாத அக் கொடியவர்கள் தாரின் சம்மட்டிக்கு நடுங்கினார்கள். ஒரு நாள் பனிமண்டல ராட்சதர்களின் அரசன் தாரின் சம்மட்டியைத் திருடித் தன் நாட்டில் பனிப் பாறைகளுக்குள் ஒளித்து வைத்து விட்டான். கடவுளர்கள் கவலை அடைந்தார்கள். ராட்சதர்கள் அவர்களைத் தாக்குவார்களானால் அந்தச் சம்மட்டி இல்லாமல் தார் கடவுளால் அவர்களை விரட்டி வெற்றி கொள்ள முடியாதே.

நெருப்புக் கடவுள் லோகி. தாரின் சம்மட்டி எங்கே ஒளிக்கப் பட்டிருக்கிறதென்று கண்டு வரக் கடவுளர்கள் லோகியை அனுப்பினார்கள்.

திரும்பி வந்த லோகி அழகின் அதி தேவதையான ஃபெரயாவைத் தனக்கு மனைவியாக்கினால் சம்மட்டியைத் திருப்பித் தருவதாகப் பனி மண்டல ராட்சதன் கூறுவதாகத் தெரிவித்தான். இதைக் கேட்ட அழகுத் தேவதை அதிர்ந்து போனாள். அந்த ராட்சதனை மணக்க விரும்பவில்லை. லோகி ஓர் ஏற்பாடு செய்தான். தாரை ஃபெரயா போல உருமாற்றி முகத்துக்குத் திரையிட்டு மூடி மணப் பெண்ணாகப் பனி மண்டல அரசனிடம் அழைத்துப் போனான். புது மணப் பெண்ணின் வருகையைக் கொண்டாடப் பெரிய விருந்து வைக்கப் பட்டது. அதில் மணப் பெண், சமைத்த ஒரு கொழுத்த முழுக் காளையை உண்டதையும் அறுபது காலன் மதுவைக் குடித்ததையும் கண்டு பனியரக்கன் வியந்து போனான்.

''உங்களைக் கண்டதில் மணப் பெண்ணுக்கு அப்படி ஒரு திருப்தி, மகிழ்ச்சி. அதில் அவள் பசி பல மடங்காகி விட்டது'' என்று சமத்காரமாகக் கூறினான் லோகி.

''முகத் திரையை ஏன் அகற்றவில்லை?'' என்றான் அரக்கன்.

''உங்களைப் போன்ற ஓர் அழகான அரசனை அவள் இதுவரையில் கண்டதில்லை. அதனால் ஏற்பட்ட வெட்கம்'' என்றான் லோகி.

பனி அரக்கனுக்கு ரொம்ப ரொம்ப மகிழ்ச்சியாகியது. முகத் திரையின் ஒரு மூலையை மெள்ளத் தூக்கிப் பார்த்தவன் பட்டென்று மூடிவிட்டான். ''அவள் கண்கள் ஏன் இப்படி நெருப்புப் போல் ஜொலிக்கின்றன?''

''அது உங்கள் மீது ஏற்பட்ட காதலின் தகதகப்பு'' என்றான் லோகி.

இந்தப் பதிலினால் திருப்தியும் ஆனந்தமும் அடைந்த அரக்கன் தன் வீரர்களில் பத்துப் பேரை அனுப்பிச் சம்மட்டியைத் தூக்கி வருமாறு கட்டளையிட்டான். சம்மட்டி வந்ததும் அது மணப் பெண் முன்பு வைக்கப்பட்டது. அப்படித்தான் நிபந்தனை. உடனே தன் முகத் திரையைத் தூர வீசிவிட்டுத் தார் தன் சம்மட்டியை எடுத்துக் கொண்டு ''நான் மணப் பெண்ணல்ல; தார்!'' என்று ஒரு சுழற்றுச் சுழற்றித் தன் சம்மட்டியை வீசினான். எங்கே யார் மீது? பனி அரக்கனின் மீதுதான். அடுத்த விநாடி அவனும் அவன் சகாக்களும் சட்னி!

—கிட்டு



தெரியுமா?

1031. மாமிச பட்சணிகளில் மிகச் சிறியது எது?

1032. ஊர்ந்து செல்லும் ஜந்துக்களில் மிகப் பெரியது எது?

1033. ஊர்வனவற்றில் மிகச் சிறியது எது?

1034. நாய்களில் மிகச் சிறிய நாய் எது? எங்குள்ளது?

1035. நாய்களில் மிகப் பெரிய வகையின் பெயர் என்ன?

1036. கொறித்துத் தின்னும் பிராணிகளில் மிகச் சிறியது எது?

1037. கொறித்துத் தின்னும் பிராணிகளில் மிகப் பெரியது எது தெரியுமா?

1038. சுத்த நீர் வாழ் மீன்களில் மிகச் சிறிய இனத்தின் பெயர் என்ன, எங்குள்ளது?

1039. கடலில் வாழும் மிகப் பெரிய மீன் எது?

1040. சுத்த நீரில் வாழும் மீன்களில் மிகப் பெரியது எது?

1041. உலகின் மிகப் பெரிய விமான நிலையம் எது தெரியுமா?

1042. உலகின் மிகப் பெரிய அரங்கம் (தியேட்டர்) எங்குள்ளது?

1043. உலகின் மிகப் பெரிய ஹோட்டல் எங்குள்ளது? இதன் அமைப்பு எப்படி?

1044. உலகின் மிகப் பெரிய கதீட்ரல் எங்குள்ளது?

1045. உலகின் மிகப் பெரிய நூல்கள் வெளியீட்டு நிறுவனம் எது தெரியுமா?

1046. மிக அதிகமான குழந்தைகளுக்குத் தாயாக விளங்கிய மாதரசி எந்த நாட்டைச் சேர்ந்தவள் தெரியுமா?

1047. உலகின் மிகப் பெரிய யுத்தக் கப்பல் எது?

1048. உலகின் மிகப் பெரிய சுவர்க் கடிகாரம் எது, எங்குள்ளது?

1049. உலகின் மிகப்பெரிய முட்டை?

1050. உலகின் மிகச் சிறிய முட்டை எதனுடையது?

1051. உலகின் மிகப் பெரிய விதை எது தெரியுமா?

1052. உலகின் மிகப் பெரிய விரிகுடா எது தெரியுமா?

1053. மிகப் பெரிய உள்நாட்டுக் கடல் எது?

1054. உலகின் மிகப் பெரிய தீவு எது?

தெரியுமே!

விடைகள் : 1031. வட அமெரிக்காவில் வாழும் வீசல் பிராணி. வாலைச் சேர்த்து இதன் நீளம் 8½ அங்குலங்கள். நன்கு வளர்ந்த இதன் நிறை 1½லிலிருந்து 2½ அடி நீளங்கள் வரை. 1032. தென்கிழக்கு ஆசியாவில் வாழும் உப்புநீர் முதலைகள்தான். ஊர்வனவற்றில் பெரியதும் அதிக நிறையுடையதுமான ஜந்து. நீளம் 33 அடிகள். 1033. ஒருவகைப் பல்லிகள். கெக்கோ (Gecko) என்று பெயர்- 18 மில்லி மீட்டர் நீளமுடையது. 1034. மெக்ஸிகோவில் உள்ள சிகாஹுஹுவா என்ற இன நாய் மிகச் சிறியது. இதன் சராசரி நிறை 2-லிருந்து 4 பவுண்டுகள். நன்கு வளர்ந்த சில நாய்கள் 16 அவுன்ஸ் நிறைகூட இருந்திருக்கிறது. 1035. ஸெயின்ட் பெர்னார்டு என்ற நாய் வகைகள்தான் மிகப் பெரியது. 1036. ஒருவகை வயல் எலிகள் 4.2 லிருந்து 10.2 கிராம்கள் வரை நிறையுடையவை. வாலுடன் சேர்த்து இதன் நீளம் 5.32 செ.மீ. 1037. காபிபாரா என்ற ஒருவகை நீர்ப் பன்றிகள். தென்அமெரிக்காவின் உஷ்ணப் பிரதேசத்தில் வாழும் இதன் நீளம் 4½ அடிகள். நிறை 150 பவுண்டுகள். 1038. பண்டகா பிக்மயா என்ற கண்ணாடி மீன். பிலிப்பைன் நாட்டில் ஓடைகளிலும் ஏரிகளிலும் வாழுகின்றது. நிறை 6 மி.கிராம். நீளம் 7லிருந்து 11 மி.மீ. வரை. 1039. திமிங்கிலச் சுறா மீன்கள் (திமிங்கிலம் பெரியதுதான். ஆனால் மீன் வகையல்ல) திமிங்கிலச் சுறாவின் நீளம் 59 அடிகள். நிறை 42.9 டன்கள். நன்னம்பிக்கை முனையை அடுத்துள்ள கடலில் காணப்படுகிறது. 1040. ஐரோப்பியப் பூனை மீன்கள் (Catfish) ரஷ்யாவிலுள்ள நதிகளில் காணப்படும் வகைகளின் நிறை 565 பவுண்டுகள். 1041. அமெரிக்காவிலுள்ள டல்லஸ் இண்டர்நேஷனல் விமான நிலையம். வாஷிங்டனில் உள்ளது. 1042. சைனாவில். பீகிங்கிலுள்ளது. 12.9 ஏக்கரா நிலப்பரப்பில் 10,000 மக்கள் அமரக்கூடிய வகையில். 1043. மாஸ்கோவிலுள்ள ஹோட்டல் ரோஸியா. 3200 அறைகள் 6000 விருந்தாளிகளை வரவேற்கக் கூடியது 14 மாடிகள். 1044. நியூயார்க்கில். 1892ல் கட்ட ஆரம்பிக்கப்பட்ட இது இன்னும் முற்றுப் பெறவில்லை. கட்டடத்தின் (ப்ளிந்த் ஏரியா) பரப்பு 121,000 சதுர அடிகள். 124 அடி உயரம். தொழுகைக்கு வருபவர்கள் உட்காரும் கூடத்தின் நீளம் 601 அடிகள். 1045. லண்டனில் உள்ள சர்வதேசப் பதிப்பகக் கழகம். 15 தினப் பத்திரிகைகள், 229 வார, மாத இதழ்களை வெளியிடுகிறது. 30,600 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். 1970ல் இந்நிறுவனத்தின் வரவு செலவு 156,000,000 பவுன்கள். 1046. ரஷ்யாவைச் சேர்ந்தவர். 1816லிருந்து 1872 வரை வாழ்ந்த மாதரசி வாசிலெட்டுக்கு 69 குழந்தைகள் 27 பிரசவங்களில் 16 இரட்டைகள், 7 டிரிப்லெட்டுகள், நான்கு குவாட்ரப்லெட்டுகள். 1047. அமெரிக்காவிலுள்ள விமானந் தாங்கிக் கப்பலான என்டர் பிரைஸ்தான் உலகிலேயே மிகப்பெரிய யுத்தக் கப்பல். 1,101 அடி நீளம். 85,350 டன்கள் நிறை. 1048. பிரான்ஸிலுள்ள ப்யூவைஸ் (Beauvais) கதீட்ரலில் இருக்கும் அஸ்ட்ரானமிகல் கடிகாரம். 40 அடி உயரம் 20 அடி அகலம் 9 அடி கனம் 90,000 பாகங்களைக் கொண்ட இக்கடிகாரம் 1865க்கும் 1868க்குமிடையே உருவாக்கப்பட்டது. 1049. வடஆப்பிரிக்க நெருப்புக் கோழியினுடையது. 7 அங்குல நீளமும் 3.88 பவு. நிறையும் 6 அங்குல குறுக்களவும் கொண்டது. 1050. தேன்சிட்டினுடையது. 11.4 மி.மீ. நீளம் 8 மி.மீ. அகலம். 1051. இந்துமகா சமுத்திரத்திலுள்ள சேஷெல்ஸ் தீவுகளில் வளரும் தென்னையின் காய்கள்தான் மிகப்பெரிய விதை. தேங்காயின் நிறை 40 பவுண்டுகள். 1052. வங்காள விரிகுடாதான். 2250 மைல் நீளமுள்ள கடற்கரை இலங்கையிலிருந்து பர்மாவின் பகோடா முனைவரை விரிந்துள்ளது. 1053. காஸ்பியன் கடல். 1054. ஆஸ்திரேலியாவை ஒரு கண்டமாகக் கருதித் தவிர்த்துவிட்டால் மிகப்பெரிய தீவாகக் கருதப்படுவது கிரீன்லாந்து. பரப்பளவு 84,000 சதுர மைல்கள்.

வளரும் குழந்தைகளுக்கு வாய்ப்பான துணை இன்க்ரிமின்*!



துள்ளித் திரியும் கன்றுப் பருவம்... ததும்பி வழியும் சக்தி... பொங்கிப் பெருகும் பூரிப்பான ஆரோக்கியம்!

இதுதான் வளரும் பருவம். உடலும் உள்ளமும் ஓங்கி வளரும் இச் சமயத்தில் உங்கள் குழந்தைகளுக்கு இன்க்ரிமின் வழங்கி வாருங்கள். பலனளிக்கும் வைட்டமின்கள், இரும்புச் சத்து, அதி முக்கிய அமினோ அமிலம், வளரும் பருவத்தில் அத்தியாவசியமான இவை அனைத்தும் அடங்கியது இன்க்ரிமின் டானிக்.

இன்க்ரிமின்*

இன்க்ரிமின் டானிக் வளரும் பருவத்தினருக்கு ஒரு வரப்பிரசாதம்

டாக்டர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான பெயர் Lederle ஸயனமைட் இந்தியா லிமிடெட்டின் ஒரு பிரிவு

*அமெரிக்கன் ஸயனமைட் கம்பெனியின் ரிஜிஸ்டர்டு டிரேட் மார்க்

SISTAS-INC-3068A TAM



'கோகுலம்'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக ஆர். அனந்தநாராயணனால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ● ஆசிரியர்: சதாசிவம்


சாகசத்துக்கு இதோ ஒரு டிக்கெட்!


இந்திரஜாலக் காமிக்குகள்—ஆயிரக்கணக்கான சிறுவர்களை மெய்சிலிர்க்க வைக்கும் மாதமிருமுறை வெளிவரும் பத்திரிகை—சிறுவர்கள் என்ன, பெரியவர்களையும் கூட கவர்ந்துள்ளது இது—ஃபாண்டம் என்ற இறவாத வேதாளத்தின் சாகசச் செயல்களைப் படித்து அனுபவியுங்கள். ஃபாண்டம், மண்ட்ரேகா, மற்றும் பலர் தீமையை எதிர்த்து புரியும் செயல்களில், சாகசம், தீரம், துடிப்பு, ஸஸ்பென்ஸ் எல்லாம் உள்ளன.

ஆங்கிலம், இந்தி, மராத்தி, குஜராத்தி, தமிழ், வங்காளம்—ஆகிய ஆறு மொழிகளில் பிரசுரிக்கப்படுகிறது. எந்தக் குழந்தையும் இந்திரஜாலக் காமிக்குகளைப் படிக்கத் தவறக்கூடாது.

இந்திரஜாலக் காமிக்ஸ்

டைம்ஸ் ஆப் இந்தியா வெளியீடு
டாக்டர் தாதாபாய் நௌரோஜி ரோடு
பம்பாய் - 400001





உங்களுடைய பார்சல்கள் எங்களுடைய வாழ்வு.



எனவேதான் உங்கள் பார்சல்களைப் பத்திரமாகவும், குறித்த நேரத்திலும், ஒழுங்காகவும் கொண்டு சேர்க்கிறோம்.

எப்படி என்று கேட்கிறீர்களா?

வேகமாக: ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு நேரிடையாகச் செல்லும் பார்சல் சர்வீஸ் இருப்பதனால் உங்கள் பார்சல்கள் வழியில் ஏற்றி இறக்கப்படுவதில்லை. மேலும் எங்கள் லாரிகள் அனைத்தும் எங்களுக்குச் சொந்தமானவை. எனவே காத்திருக்கத் தேவையில்லை. டிரெய்லர்களும் நிறைய இருப்பதால், அதிக பார்சல்களை விரைவில் ஏற்றிச் செல்ல முடியும். இவை தவிர, மின்னல்வேக சர்வீஸ்களும் உண்டு. வண்டிகள் நடுவழியில் பழுதடைந்தால், உடனடியாகச் செப்பனிட பட்டறைகளையும் நிறுவியிருக்கிறோம்.

பத்திரமாக: எங்கள் டிரைவர்கள் அனைவரும் திறமைசாலிகள். அவர்களை அவ்வப்போது சோதனைகளுக்கும் உட்படுத்துகிறோம். அபாயம் இருக்கக்கூடிய நள்ளிரவு நேரங்களில் வண்டி ஓட்ட அனுமதிப்பதில்லை. மேலும் எங்களது ஏற்றி-இறக்கும் பணியாட்கள் அனுபவம் மிகுந்தவர்கள். உங்கள் பார்சல்களை பூப்போல கையாளக் கூடியவர்கள். எனவே பார்சல்கள் பத்திரமாகப் போய்ச் சேர்கின்றன.


ஒழுங்காக: எங்கள் ஊழியர்கள் நன்கு பயிற்சி பெற்றவர்கள். அனுபவசாலிகள். திறமையுடன் பணியாற்றுவதையே லட்சியமாகக் கொண்டவர்கள். இன்முகமும், புன் சிரிப்பும், இணையற்ற செயல் திறனும் இணைந்தவர்கள்.

இப்படித்தான் 60 ஆண்டு காலமாக உங்களுக்குத் தொண்டாற்றி வருகிறோம். இனியும் தொடர்ந்து பணி புரிவோம்.

TVS உங்கள் நம்பிக்கைக்கு உரியது டிவிஎஸ்

ஸதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை

(டிவிஎஸ் தொகுப்பைச் சேர்ந்த நிறுவனங்களில் ஒன்று)



FDS SR 2008A